# இரத்தம் சிந்தித்தான் பாவ மன்னிப்பா ?



Rev.Dr.A. சேவியர் B.Sc.,M.A (Theo).,DD.
எழுத்தாளர் சுவிசேஷகர் போதகர்

# இரத்தம் சிந்தித்தான் பாவ மன்னிப்பா?


ஆசிரியர்

**Rev. Dr. A. சேவியர்** B.Sc., M.A, (Theology), D.D.

(சுவிசேஷகர், போதகர், எழுத்தாளர்)



2016

வெளியீடு

**"கடைசிகால விடுதலை ஊழியம் டிரஸ்ட்"**

எண். 3, 27வது தெரு, சிவசக்தி நகர்,

சி-பிரிவு, அண்ணனூர், சென்னை - 600 109.

போன்: 044-26375758, 26841363

செல் : 9444979822, 9444873848, 9444184648

facebook:- endtimedeliveranceministry; youtube:- endtimetrust xavier

www.endtimedeliverance.com; e-mail:-info@deliverance.com

# இரத்தம் சிந்தித்தான் பாவ மன்னிப்பா?

First Edition : 2016
Total Copies : 1000
Book Serial No : 13/13

**Copy right :**

End Time Deliverance Ministry Trust

**Sponsored by :**

**Pastor John Ramesh**

No. 4, Selvam Nagar,
Lakshmipuram, Kolathur,
Chennai - 600 099.
Cell : 98844 27472

காணிக்கை : ₹ 50/-

**Printed by :**

**Saravan Printers**

New 91, Old 44, V.M. Street (Near BSNL Quarters)
Royapettah, Chennai - 600 014.
Email : saravanprinters@gmail.com

# முன்னுரை

## விசுவாசம் வெற்றியைத் தரும்

"இரத்தம் சிந்துதலில்லாமல் பாவமன்னிப்பு உண்டாகாது" (எபி.9:22)

"ஆத்மாவிற்காகப் பாவநிவர்த்தி செய்கிறது இரத்தமே" (லேவி. 17:11) போன்ற பலவசனங்களை வாசித்தாலும்,

"இயேசுவின் இரத்தஞ்சிந்துதலில்லாமல் பாவமன்னிப்பு உண்டாகாதா?" என்ற கேள்வி ஏராளமான மக்களின் உள்ளத்தில் எழுந்த வண்ணம் இருக்கின்றன.

நானும் ஒருகாலத்தில் – அதுவும் இரட்சிக்கப்பட்ட பின்பும்கூட – அப்படித்தான் இருந்தேன்.

பரிசுத்த ஆவியானவர், அடியேனுக்கு விளக்கிக் காட்டியதை உங்களுக்கும் இந்தக்கையேடு மூலமாய் வெளிப்படுத்துவதிலே கர்த்தருக்குள் சந்தோசமடைகின்றேன்.

*வாசியுங்கள் ! விசுவாசியுங்கள் !*

*ஆசீர்வாதம் பெறுங்கள் !*

*இயேசு சீக்கிரம் வருகிறார் !*

*ஆயத்தமாவோம் !! ஆயத்தமாக்குவோம் !!!*

சென்னை

ஆகஸ்ட் 2016 — ஆசிரியர்

**குறிப்பு :**

இது குறித்து எந்த சந்தேகமோ, கேள்வியோ இருந்தால், தயவுசெய்து ஆசிரியரிடம் எப்போதும் கேட்கலாம்; அவர் நடத்தும் கூட்டங்களில் கேள்விகளோடு வரலாம்; மாத இதழுக்கும் எழுதி அனுப்பலாம்.

# பொருளடக்கம்


| வ.எண். | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | மனிதனின் குணாதிசயங்கள் ........................ | 5 |
| 2. | எது பாவம்? எங்கே ஆரம்பம்? காரண கர்த்தா யார்? .................................... | 7 |
| 3. | பாவம் - பாவ மன்னிப்பு ............................... | 10 |
| 4. | பாவ மன்னிப்பு பற்றி வேதங்களும், உலகமும் சொல்வதென்ன? .......................... | 14 |
| 5. | இயேசுவின் இரத்தம் நம்மைக் கழுவுமா? ....... | 17 |
| 6. | கன்னியின் வயிற்றில் ஏன் பிறந்தார்? ........... | 20 |
| 7. | இயேசுவின் இரத்தம், நரபலி இரத்தமா? ......... | 23 |
| 8. | பைபிளை வைத்து மட்டும் இரத்தம் சிந்தி இயேசு பாவம் போக்கினார் என்று எப்படி நம்புவது? ... | 25 |
| 9. | இயேசு எப்படி பாவ மன்னிப்புக்கு வித்திட்டார்? | 28 |
| 10. | இயேசு, இரத்தம் சிந்தும் முன்னே பாவம் மன்னிக்கப்படாதா? ...................................... | 32 |
| 11. | பிற்சேர்க்கை :- | |
| | 1. இயேசு மரிப்பார் என்று பழைய ஏற்பாட்டில் வசனம் உண்டா? .................................. | 34 |
| | 2. இயேசு உயிர்த்தெழுவார் என்று பழைய ஏற்பாட்டில் வசனம் உண்டா? .................. | 35 |
| | 3. மேசியா எதற்கு வருவார் என்று பழைய ஏற்பாடு சொல்கின்றது? ........................... | 36 |
| | 4. பலிமுறைகள், இயேசுவுக்கு நிழல் என்று யூதர்களுக்குத் தெரியாதா? ....................... | 41 |

# 1. மனிதனின் குணாதிசயங்கள்

தேவன் 6ம் நாளிலே மனிதனைச் சிருஷ்டித்தார்; உண்டு பண்ணினார். மூன்று ஆட்தத்துவமாய் மனிதனின் இரட்சிப்புக்காக செயல்படும் ஒரே தேவன் இதைச் செய்தார் (ஆதி.1:26; யோபு 33:4; எபி.11:3). நம் தேவன் ஆவியாய் இருக்கிறார் (யோ.4:24). ஆவிக்குரிய மேனியும் உண்டு (1 கொரி. 15:40, 44). ஆனால் அந்த மேனியை - ரூபத்தை, நம் மாம்சீக கண்களால் பார்க்க முடியாது. (1 தீமோ. 6:16; யாத்.33:20; அப்.22:11) இந்த தேவன், தமது சாயலாகவும் (character - குணாதிசயம்), தமது ரூபத்தின்படியேயும் (figure) மனுஷனைப் படைத்திருக்கிறார். சிருஷ்டிப்பு (creation) என்பது ஒன்றுமில்லாமையிலிருந்து படைப்பது. உண்டாக்குவது என்றால், ஏதோ ஒரு பொருளிலிருந்து உருவாக்குவது. தேவன் ஆதி.1:26, 27ன் படி ஒன்றுமில்லாமையிலிருந்து மனிதனை சிருஷ்டித்திருக்கிறார்; ஆதி.2:7ன் படி மண்ணினாலே மனிதனை உண்டாக்கியிருக்கிறார். ஆக, அவர் இரண்டு மனிதனைப் படைத்தாரா? இல்லையே! மல்.2:15ன் படி அவர் ஒருவனையல்லவா படைத்தார்!

2 கொரி.4:16ன் படி, மனுஷனுக்கு, புறம்பான மனுஷன், உள்ளான மனுஷன் என்று இரண்டு பிரிவுகள் உள்ளன. புறம்பான மனுஷன்தான், மண்ணினால் உருவாக்கப்பட்ட நாம் காணும் வெளிப்படையான சரீரம். உள்ளான மனுஷன் எது? இது கேள்வி. 2 பேது. 1:13,14 ஐவாசித்தால், "நான் என் கூடாரத்தைவிட்டு போவது சீக்கிரத்தில் நேரிடுமென்று அறிந்து" என்று உள்ளது. இது பேதுரு மரிக்கப்போவதைப் பற்றி எழுதுகிறார். "நான்" என்பது என்ன? "கூடாரம்" என்பது என்ன? பவுல் எழுதுவது இன்னும் கொஞ்சம் விளக்கமாய் உள்ளது. ".... நான் நெருக்கப்படுகிறேன். தேகத்தைவிட்டுப் பிரிந்து கிறிஸ்துவுடனே கூட இருக்க எனக்கு ஆசையுண்டு..." (பிலி.1:23). ஆக, தேகம், சரீரம்தான் கூடாரம். இதிலிருந்து பிரிந்து போகிறது என்ன? லூக்.12:20ல், "உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக் கொள்ளப்படும்" என்ற வசனப்படி, மனிதன் மரிக்கும்போது, ஆத்மா, சரீரமாகிய கூடாரத்தை விட்டுப் போகிறது என அறிகிறோம். பிர.12:7; யாக். 2:26 போன்ற வசனங்களின்படி, மரிக்கும்போது ஆவியும் பிரிகிறது. ஆக, சரீரக்கூடாரத்துக்குள் ஆவியும், ஆத்மாவும் எபி.4:12ன் படி இணைந்திருக்கிறது

என்று அறிகிறோம்; அந்த உள்ளான மனுஷன்தான் நாம் காண முடியாத (உணர முடிகின்ற) ஆவியும் ஆத்மாவும் என்றும் அறிகிறோம். நம்மால் காணக்கூடாத தேவன், இந்த உள்ளான மனுஷனாகிய ஆவியும், ஆத்மாவையும் தன் சாயலின்படியும், தன் ஆவிக்குரிய ரூபத்தின்படியும் படைத்திருக்கிறார். அல்லேலூயா!

ஒரு காரியத்தை நாம் அறிய வேண்டும். இந்த மண்ணான சரீரம் நாம் பூமியில் வாழ; தேவன் ஆவியாயிருப்பதால், அவரோடு தொடர்பு கொள்ள நமக்கு ஆவி கொடுக்கப்பட்டுள்ளது. தேவ ஆவி அன்புள்ளது; பெருமையில்லாதது; இறுமாப்பு இல்லாதது; அயோக்கியமானதைச் செய்யாது; தற்பொழிவை நாடாது; வீணாய் சினமடையாது; சகலத்தையும் தாங்கும்; மன்னிக்கும். இன்னும் ஏராளம் சொல்லலாம்; இப்படிப்பட்ட சாயலின்படிதான் ஆதிமனிதனைப் படைத்தார். இந்த சாயலுள்ள, அவரின் ஆவிக்குரிய ரூபமுள்ள உள்ளான மனுஷனைத்தான் - **ஜீவ சுவாசத்தைத்தான்-அவரின் ஆவியைத்தான், (அவர் சாயலைத்தான்)** (ஆர்டினரி சுவாசமல்ல....) மண்ணாலான புறம்பான மனுஷனில் ஊதினார். அவன் உலக மனிதனானான். (ஆதி. 2:7) அல்லேலூயா! ஆத்துமா என்பது, உலகவாழ்வுக்கான அன்பு, விருப்பம், உணர்ச்சி, திடமனம், அறிவு போன்றவைகளின் ஸ்தானமாயிருக்கிறது என்று மத்.11:23; 26:38; யோ.12:27; உபா.6:5; 1 சாமு. 8:1; யோ. 14:23; சங்.42:6; 84:2; 103:1-3; நீதி. 24:14; 2:10 போன்ற பலவசனங்களால் அறிகிறோம். இந்த ஆத்மாவை, தேவனோடு தொடர்பு கொள்ளும் ஆவி கட்டுப்படுத்துகிறது; (சங்.103:1-3) இந்த ஆத்மா உலக வாழ்விலிருக்கும் சரீரத்தை கட்டுப்படுத்துகிறது. ஆத்மா, ஆவிக்குள் இருந்தால்தான், சரீரம் தெய்வீக நிலையில், கறை திரை அற்றுவாழும். இந்த நிலை இல்லாதபோதுதான், "என் ஆத்மா மண்ணோடு ஒட்டிக் கொண்டிருக்கிறது; உமது வசனத்தின்படி உயிர்ப்பியும்" என்று தாவீது, சங். 119:25ல் பாடுகிறான். ஆக, தேவசாயல், தேவசுபாவம், தேவகுணாதிசயம் மனிதனுக்குள் வெளிப்படவேண்டுமென்று, படைப்பின் போதே தேவன் விரும்பி இருக்கிறார். ஆமென்!

**"ஆவியும் உயிரும் ஒன்று"** என்ற போதனையோ, **"ஆவியும் சரீரமும் இணைந்திருக்கும் போதுதான் அது ஆத்மாவாகும்"** என்ற போதனையோ, **"ஆத்மா என்ற ஒன்று இல்லை"** என்ற போதனையோ வேதத்திற்கு விரோதமானது; கள்ள உபதேசத்திற்கடுத்தது. (இது குறித்து, ஆசிரியரின் "தெரிந்து கொள்ளுங்கள் - பாகம் 1" ல் உள்ள, ஆவி - உயிர் - ஆத்மா" என்ற செய்தியை வாசியுங்கள்)

ஆக, மனிதனை தன் சாயலாக (character - குணாதிசயம்) படைத்த தேவன், அவன் அப்படித்தான் வாழவேண்டும் என்று விரும்பினார். அந்த

குணாதிசயங்கள் மனிதனுக்குள் காணப்படவில்லையே என்று அவனோடு போராடிப் பார்த்தார் (ஆதி.6:3) மனிதன் மாறவில்லை. மனிதனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகியது; அவன் இருதயத்து (ஆவி - 1 பேது. 3:4) நினைவுகளின் தோற்றமெல்லாம் (ஆத்மா மூலம் சரீரத்தில் வெளிப்படுவது) நித்தமும் பொல்லாததாய் மாறியது (ஆதி.6:5). மனிதனைப் படைத்ததற்கே தேவன் மனஸ்தாபப்பட்டார்; விசனப்பட்டார் (ஆதி.6:6). இந்த நிலையைத்தான் மனிதனின் பாவநிலை என்று வேதம் சொல்கின்றது. அப்படியானால் இந்த பாவநிலை எப்படி வந்தது? காரண கர்த்தா யார்? எது தான் பாவம்?

❖ ❖ ❖

## 2. எது பாவம்? எங்கே ஆரம்பம்? காரணகர்த்தா யார்?

மனித சமுதாயம், ஆதி.1:28ல் சொல்லப்பட்ட, பலுகி, பெருகி, பூமியை நிரப்பி, கீழ்ப்படுத்தி ஆண்டுகொள்ளும் 5 விதமான அதிகாரத்தோடு, ஆதாம் - ஏவாள் என்ற ஆதிப்பெற்றோரில் ஆரம்பமாயிற்று ஏதேனிலே. பகலில் தினமும் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்தில் தேவன் உலாவி அவர்களோடு அளவளாவி வந்தார். வானத்திலே பாவம் செய்து தள்ளப்பட்ட (ஏசா.14; எசே.28) சாத்தான், பூமியின் தன் அதிகாரமெல்லலாம் - ஆட்சியெல்லாம் - ஆதாமுக்கு போய்விட்ட நிலையில், ஆதாமை கெடுக்க வேண்டும், ஆதாமை தேவனைவிட்டுப் பிரிக்க வேண்டும் என்ற தந்திர எண்ணத்தில், வலுசர்ப்பத்துக்குள் நுழைந்து, தேவனுடைய, ஆதி.2:17ல் சொல்லப்பட்ட வார்த்தையை விசுவாசித்து கீழ்ப்படிந்து இருந்ததை கெடுத்து, தன் வார்த்தைப்படி ஆதி மனிதரை ஏவினான். தேவ ஆவியோடு தொடர்பு கொண்டிருந்த ஆதிமனிதரின் ஆவி, அன்று தடம்புரண்டு, பிசாசின் ஆவியோடு சேர்ந்து, பிசாசு சொன்னதை நம்பியது; அது அப்படியே ஆத்மாவுக்குப் போனதால் அந்த ஆத்மாவின் சொற்படி, அவர்கள் சரீரங்கள் கீழ்ப்படிந்தன. தேவ வார்த்தையை விசுவாசித்து கீழ்ப்படியாமல், பிசாசின் வார்த்தையை (ஆதி.3:3-6) விசுவாசித்து கீழ்படிந்ததே மனிதக் குலத்தின் முதல் தவறு; இதுதான் தேவனுக்கு விரோதமான பாவம் என்று வேதம் சொல்கின்றது. இதற்கான சாபம்தான், மகிமை எடுப்பட்டுப்போய் அவர்கள் நிர்வாணியாய்ப் போனநிலை. இது அவர்களே தேடிக்கொண்டது.

இதிலிருந்து விடுதலை அளித்து ஆதிப்பெற்றோரை காப்பாற்ற தேவன் ஓடிவந்தார். ஆதாமோ தான் செய்த தவறுக்கு ஏவாள் மேல் பழிபோட்டான்; ஏவாளோ பிசாசின்மேல் பழிபோட்டாள். அவர்கள் நிர்வாண நிலையிலிருந்தும் கூட தங்களின் தவறை ஒத்துக்கொள்ளவில்லை. தேவனுக்கு விரோதமாய் செய்த குற்றத்தை - பாவத்தை, தேவன் கேட்டும் அறிக்கையிடவில்லை; மன்னிப்பும் கோரவில்லை. நம் தேவன் மறக்கிறவர்; மன்னிக்கிறவர் (1 யோ.1:8,9). உள்ளான மனுஷனாம் ஆவியிலே, படைக்கும்போது, மனுஷனுக்கு இருந்த தேவசாயல் - குணாதிசயம் - character - ஒரு நிமிஷ பிசாசின் தொடர்பால் மாறிப்போய்விட்டது. தேவனுக்கும் மனிதனுக்குமுள்ள தொடர்பு - communication - அற்றுப்போனதால்தானே ஒளிந்து கொண்டார்கள். இதுதான் அவர்களுக்கு வந்த ஆவிக்குரிய மரணம். (Death is the cessation of communication). அவர்களுக்குள்ளே மனமாற்றம் - மன்னிப்பு கேட்கும் தன்மை - வராதபடிக்கு பிசாசின் ஆவி அவர்களின் மனக்கண்களை குருடாக்கிவிட்டது. (2 கொரி.4:4) மன்னிப்பு கேட்டிருந்தால் மரித்துப்போன ஆவியிலே மறுபிறப்பு உண்டாயிருக்கும். ஆமென். ஆதி மனிதருக்குள்ளிருந்த இச்சையானது பிசாசோடு சேர்ந்து கர்ப்பம் தரித்து பாவத்தை பிறப்பித்தது. தேவன் அவர்களைத் தேடிவந்த பிறகும், பாவத்திலிருந்து வெளியேறாமல், அதிலேயே கிடந்ததால் - பாவம் பூரணமானதால் - மரணம் வந்தது (யாக்.1:15). சரீரமரணத்தோடு, இரண்டாம் மரணதண்டனையாகிய நரகமும் வந்தது. ஆக, தேவனின் வார்த்தையை விசுவாசித்து கீழ்ப்படியாமல், தேவனுக்கு எதிராளியான பிசாசின் வார்த்தையை விசுவாசித்து கீழ்ப்படிந்ததே தேவனுக்கு விரோதமான பாவம்.

அவர்களுக்கும், சாத்தானுக்கும் தண்டனை கொடுத்தார் தேவன். தண்டனையின் ஷரத்தைக்கேட்ட ஆதாம் (ஆதி.3:14 - 19) அதன் உள்ளர்த்தத்தை உணர்ந்தான்; "மேசியா வந்து ஜீவனைத் தருவார்; அவர் தன் மனைவி மூலமே பிறப்பார்" என்பதை அறிந்தான். (ஆதாம் சாதார மனிதனல்ல; தேவனால் உண்டாக்கப்பட்ட ஆதிமனிதன். தேவனின் முழுசாயலையும் உடையவன்; அத்தனை ஜீவராசிகளுக்கும் பெயரிடக்கூடிய ஞானமுள்ளவன்; இந்த உலகத்துக்கே அதிபதி). **அறிந்த - உணர்ந்த - ஆதாம், தான் ஒரு பெரிய தீர்க்கதரிசி என்பதைக் காட்டினான்.** எப்படி? அந்த நாள் வரை தன் மனைவிக்கு பெயரிடாதவன், அன்று தன் மனைவிக்கு ஏவாள் என்று பெயரிட்டான். "ஏனெனில் அவள் ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாயானவள்" (ஆதி.3:20). அல்லேலூயா! அவனது விசுவாசம், பிசாசைப்போல கிரியையில்லாத விசுவாசமாயிருந்தாலும் (யாக்.2:19,20) அந்த வார்த்தையை தேவன் நேசிக்கிறார். அவனது பாவத்திற்கான

தண்டனைகளை தேவன் கொடுத்திருந்தாலும், இந்த அளவுக்கு எதிர்காலத்தை உணர்ந்து மனைவிக்கு பெயரிட்ட அவனை தேவன் மெச்சுகிறார். எப்படி? பாவத்தால், சரீரத்தில் மட்டுமல்ல.... ஆவியிலும் ஆத்மாவிலும் நிர்வாணியாயிருக்கிற அவனது சரீரத்தை மூட மட்டுமல்ல.... ஆவியிலும் ஆத்மாவிலும்கூட நிர்வாணியாயிருக்கிற அவனது சரீரத்தை மூட, பாவப் பரிகாரமாய், தோலுடைகளை உண்டாக்கி அவர்களுக்கு உடுத்தினார், (ஆதி.3:21) என்னே தேவ அன்பு! இந்த தோலுடை எங்கிருந்து வந்திருக்கும்? ஏதோ ஒரு மிருகம் பலியாகியிருக்க வேண்டும். ஆமென்! ஆக, பலியாகி - இரத்தம் சிந்தி தோலுடை தயாரித்துக் கொடுத்து, பாவத்தினால் வந்த சரீர நிர்வாணத்தை, தற்காலிகமாக மறைத்து பாவ நிவாராணமளிக்கிறார். அன்றே ஆதாம் அதை உணர்ந்திருப்பான்:- "இரத்தம் சிந்தித்தான் பாவ நிவாரணம்" என்று. (இது குறித்து, ஆசிரியரின், "ஆதாமுக்கு தோலுடை ஏன் கொடுத்தார்?" என்ற செய்தியை, "விசுவாசித்தேன்! ஆகையால் பேசுகிறேன் - பாகம் 1 & 2" என்ற நூலில் வாசியுங்கள்).

மட்டுமல்ல.... இரத்தம் சிந்தி, தோலுடை உடுத்தி தன் சரீரத்திற்கும் பாவநிவாரணம் செய்த பின்னும், தேவனுக்கு விரோதமாய் செய்த பாவத்தை அறிக்கையிட்டு மன்னிப்பு பெறாமல், ஏதேனை விட்டு துரத்தப்பட்டாலும், அந்த ஏதேனின் தோலுடையின் ஆழ்ந்த நினைவு - பாரம், ஆதாமைவிட்டு மீளவே இல்லை என்று நாமறிகிறோம். "இரத்தம் சிந்துவது பாவநிவாரணத்திற்கு வழி" என்பது அவனை விட்டு மாறவே இல்லை என்று நாமறிகிறோம். எப்படி? அப்படி எண்ணம் மாத்திரம் இல்லாதிருந்தால், தான் சரணடையாவிட்டாலும் தன் பிள்ளைகளாவது தேவனுடைய சந்ததியில் இணையட்டும் என்று பலி செலுத்த அவர்களை அனுமதித்திருப்பானா? அனுப்பியிருப்பானா? (ஆதி.4), இதை வாசிக்கும் தேவ ஜனமே! பாவம் செய்து தேவனை விட்டு விலகிப்போகும் எல்லோருக்குள்ளும் கொஞ்ச நாட்களாவது தேவனின் வசனம் ரீங்காரம்மிட்டுக் கொண்டேயிருக்கும். ஆதி.6:3ல் சொன்னபடி, அவனுக்கு மரணம் வர இருக்கும் 120 வருஷம் வரைக்கும் அது ரீங்காரமிட்டுக் கொண்டேயிருந்தது. சேவல் கூவின உடனே அந்த வார்த்தையை நினைந்து மனம் மாறின பேதுருவைப்போல, ஒரு சிலர்தான் மனம் மாறுவர். (லூக்.22:60-62). வெகு சிலரோ, இருதயமாகிய ஆவியிலே சூடுண்ட பொய்யராய், மறுதலிப்பதிலேயே மரித்துப் போவார்கள். இந்த நிலைதான் ஆதாமுக்கும் 930 வயதில் நடந்தது. இதனால்தான் எபி.11ல் விசுவாச வீரர்களின் பட்டியலில் ஆபேல்தான் முதலில் நிற்கிறான்.

❖ ❖ ❖

# 3. பாவம் - பாவ மன்னிப்பு

"மனிதன் சமாதானமாய், சந்தோசமாய் வாழ்ந்து, தேவனைத் துதிக்க வேண்டும்; பக்தியுள்ள சந்ததிகள் பெருக வேண்டும்" என்பது தான் படைப்பின் நோக்கம். இதைத்தான், "படைத்தான் படைப்பெல்லாம் மனுவுக்காக; மனுவைப் படைத்தான் தனைவணங்க" என்று தாயுமானவர் பாடியிருக்கிறார். **இந்த சமாதானமும் சந்தோசமும் எப்போது குறையும்? 1. சமாதான காரணரான தேவனுக்கு விரோதமாய் நடக்கும்போது 2. அடுத்தவன் காரியத்தில் அவசியமின்றி நுழையும்போது.**

இந்த இரண்டையும்தான் நியாயப்பிரமாணம் சொல்வதாக மத்.22:36-40ல் இயேசு சொல்கின்றார்.

தேவனுக்கு விரோதமான பாவத்தில் பிரதானமான பாவம் இயேசுவை விசுவாசிக்காதது (யோ.16:8,9) இதைத்தான் பவுல் செய்தான்; தன்னை பிரதான பாவியென்றே ஒத்துக் கொண்டான் (1 தீமோ. 1 :15). தேவனை, தேவனென்று விசுவாசித்து நடுங்கியும், பிசாசைப்போல அவருடைய சொல்லுக்கு கீழ்ப்படியாதிருப்பதும்தான் இந்த பாவம். (யாக்.2:19,20). ஆதாமின் நிலை இதுதான். இப்படியாய் தேவனுக்கு விரோதமான பாவத்தை தொடர்ந்து செய்பவர்களுக்கு மன்னிப்பே இல்லை.

அடுத்தவன் காரியத்தில் - சந்தோசத்தில் - நுழைந்து, பொல்லாங்கு - தீமைசெய்வது என்பது, பிறனிடத்தில் அன்பில்லாத்தன்மை; இதனால் பாவம் - குற்றம் - தவறு பிறக்கிறது. இருதிறத்தாருக்கும் சமாதானம், சந்தோசம், நிம்மதி குலைகிறது. தேவனின் படைப்பின் நோக்கம் வீழ்ச்சியடைகிறது. இதைத்தான், "திருடாதே, பொய்சொல்லாதே, விபச்சாரம் செய்யாதே, கொலை செய்யாதே, இச்சிக்காதே" என்றெல்லாம் தேவன் சொல்லி, பாவமென்று காட்டுகின்றார். அன்றைக்கு சீனாய்மலையில் எழுத்துவடிவில் இஸ்ரேலர்களுக்கு 10 கற்பனையை கொடுத்ததும் இதற்காகவே! ஆதாமின் சந்ததி வளரும்போது, விபச்சாரம், வேசித்தனம், கொலை ஒன்றும் யாருக்கும் தெரியாது. அப்போது எந்த பிரச்சனையும் இல்லை. ஆனால் ஆபேலின் கொலைக்குப் பின்தான் கொலையின் கொடூரம் புரிந்தது; கொலை செய்வது பாவமென்று தெரிந்தது. அதை விளக்கத்தான் தேவன் வானத்திலிருந்து கீழிறங்கி காயினிடம் பேசினார். (ஆதி.4) அப்போதும் அவன் தன்னுடைய தவறை உணரவில்லை. தேவன் அவனுக்குத்தண்டனை கொடுத்த பிறகுதான் (ஆதி.4:11, 12), அவன் தகப்பன் ஆதாமுக்கு ஞானோதயம் வந்து, தன் மனைவிக்கு ஏவாள் என்று பெயர் இட்டதுபோல, தனக்குத் தண்டனை தந்தவர் தேவனென்று காயீன் உணர்ந்து, இந்தண்டனையின் பரிமாணத்தை

குறைக்க வழிதேடினான். தேவனும் அதற்கு வழிவகை செய்தார். ஆனாலும் தன் தகப்பனைப்போலவே அவனும் மன்னிப்பு கோரவுமில்லை; பெறவுமில்லை.

**ஆக, பாவம் என்பது, தேவனுக்கு விரோதமாய் நடப்பதும், சகமனிதருக்கு விரோதமாய் நடப்பதுமாகும்.** இதை சீனாய் மலைவரை ஒவ்வொன்றாக, கொஞ்சம் கொஞ்சமாக மனிதர்களிடம் சொல்லி தேவன் உணர வைக்கப் பார்த்தார்; மனிதர்கள் உணர்ந்தபாடில்லை. எனவேதான் அந்தப் பாவங்களையெல்லாம் கண்டும் காணாதவரும் போலிருந்தார். இதைத்தான் ரோ.5:13 சொல்கின்றது:- "நியாயப் பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்னும் பாவம் உலகத்தில் இருந்தது. நியாயப்பிரமாணம் இல்லாதிருந்தால் பாவம் எண்ணப்படமாட்டாது."

ஆரம்ப நாட்களில், தேவன், மனிதர்களின் அக்கிரமங்களும், பாவங்களும் பெருகினபடியால், படைத்ததற்கு மனஸ்தாபப்பட்டு, பூமியை ஜலத்தால் அழித்த பின்பு, நோவா குடும்பம் மூலம் உருவாகப் போகும் சந்ததிக்கு சொன்னதைப் பாருங்கள்:- **"மனிதன் தேவசாயலில் உண்டாக்கப்பட்டபடியால், மனுஷனுடைய இரத்தத்தை எவன் சிந்துகிறானோ, அவனுடைய இரத்தம், மனுஷனாலே சிந்தப்படக்கடவது" (ஆதி.9:6).** இதை ஆழ்ந்து தியானித்தோமானால், பிறனிடத்திலே அன்பு கூராமல், அவனது இரத்தத்தை சிந்த வைப்பது என்பது, தேவ சாயலுக்கு, தேவனுக்கே எதிரானது என்று புரிகிறது. எனவே, சகமனிதனுக்கு விரோதமாய் பாவம் - தீமை - செய்தாலே, மேற்சொன்ன இரண்டு பாவங்களையும் செய்ததற்கு சமானமாகிவிடும். இதனால்தான் புதிய ஏற்பாட்டிலே இயேசு கிறிஸ்து, "நான் உங்களில் அன்பாயிருந்தது போல, நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை கொடுக்கிறேன்" என்றார் (யோ.13:34; 15:12). மேலும்,

பாவம் செய்வது, தீமை செய்வது எல்லாமே, கவலையை, கண்ணீரை, வேதனையை உண்டாக்கும்; முடிவில் உயிரே போய்விடும். அதாவது உயிராகிய இரத்தம் கொஞ்சம் கொஞ்சமாய் குறையும்; இறுதியில் முழுவதும் இல்லாமல் போகும். மட்டுமல்ல ... ஒருவன் தற்கொலை செய்து கொண்டாலும்கூட, அதுவும், ஆதி 9:6ன் படி, தேவசாயலை - தேவனையே (தன்னையே) கொலை செய்வதாகும். ஆமென்!

**ஆவிதான் உயிர் என்று சொல்பவர்கள் புரிந்துகொள்ளட்டும்:- (See ஏசா. 42:5; யோபு 32:8; 33:4,14)**

மனிதனின் உயிர் இரத்தத்தில்தான் இருக்கிறது (ஆதி.9:4; லேவி. 17:11). இது கி.மு. 1450ல் நம் வேதத்தில் சொல்லப்பட்டது. இந்த உண்மையை,

கி.பி. 18ம் நூற்றாண்டில்தான் விஞ்ஞானமே ஏற்றுக்கொள்கிறது (ஆனால் கிறிஸ்தவன் என்று சொல்லித் திரிபவனுக்கு இன்னும் இது புரியவில்லை). எனவே, இரத்தம் சிந்தினால், உயிரைக் கொடுப்பது என்று பொருள். இயேசு இரத்தம் சிந்தினார் என்றால் உயிரைக் கொடுத்தார் என்று பொருள். புறம்பான மனுஷ சரீரத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது. உள்ளான மனுஷனாம் ஆவியின் உயிர், கிறிஸ்துவில் - இயேசுவில் - தேவவார்த்தையில் இருக்கிறது (கொலோ.3:3,4; யோ.14:6; யோ.15:7 with வெளி.19:13) இதனால் தான்,

**"லோகத் தோற்றமுதல் என்னை தெரிந்துகொண்டார்**
**தூரம் போயினும் கண்டுகொண்டார்**
**தமதுஜீவனை எனக்கும் அளித்து**
**ஜீவன் பெற்றுக்கொள் என்றுரைத்தார்" என்று பாடுகிறோம்.**

அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும், ஆவியிலே - உள்ளான மனுஷனிலே - மரித்திருந்த நம்மை தேவன் உயிரோடு எழுப்பினார் (எபே.2:1). அந்த உயிர்தான் ஜீவனுள்ள வார்த்தை; வார்த்தையாகிய இயேசு (1 பேது.1:13; யாக்.1:18; யோ.3:5; 1 கொரி.6:11). ஆமென்.

ஆக, தேவசாயலாய் படைக்கப்பட்ட ஒருவனுக்கு, இன்னொருவன் தீமைசெய்தால், இரத்தம் குறைய வைத்தால், அது தேவனுக்கே தீமை செய்வதாகும். உச்சக்கட்டமாக அவரையே கொல்வதுபோலாகும். அதனால்தான் "உனக்கும் அப்படியே ஆகும்" என்று ஆதி 9:6ல் சொல்கிறார்.

**அந்த உச்சகட்ட மரணம்**

(1) சகமனிதர்களாலேயே நடக்கலாம். அல்லது

(2) தேவ கோபாக்கினையால் வரும், சரித்திர நியாயத்தீர்ப்பாகவும் (Historical Judgement) இருக்கலாம்.

இந்த நிலை தொடர்ந்தால் பூமியிலே மனித இனமே இருக்காதே! தேவனின் படைப்பு வீணாய்ப்போகுமே! **இதற்குப் பதில் வேண்டும்.**

ஒருமுறை உயிர் போக இரத்தம் சிந்த வைத்ததற்கே, கொலைகாரன் மரித்தால், அவன் பலகொலைகள் செய்திருந்தால் அதற்குப் பரிகாரம் என்ன? பல கொலைகள் செய்தவனை பலமுறை கொல்ல முடியுமா? தூக்கிலிடமுடியுமா? **இதற்கும் பதில் வேண்டும்.**

இதையெல்லாம் உணர்ந்துதான், நம் தேவன், நியாயப்பிரமாணம் முழுமையாய் எழுத்துவடிவில் சீனாய் மலையில் கொடுக்கும் வரை, பாவங்களை எண்ணாமலிருந்து, இறுதியில், **பிரமாணத்தில் பரிகாரங்களைத் தந்தார். என்ன அவை?**

ஆரம்பத்தில் மக்களுக்குப் புரியும்படி, பலிமுறைகள், பண்டிகைகள் எல்லாம் உருவாக்கி, உணர்த்துவித்தார் நம் தேவன்.

**பலிகளிலே பிரதானம்:-**

(i) **பாவநிவாரணபலி** (தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்தால்)

(ii) **குற்றநிவாரணபலி** (சகமனிதருக்கு விரோதமாய் பாவம் செய்தால்).

இவை இரண்டிலுமே முதலிலே **பாவ அறிக்கை உண்டு.** பலியிடப்படும் ஆட்டின்மேல் கைகளை பலியிடக் கொண்டு வந்தவன் வைக்க வேண்டும். அவனது பாவங்கள் ஆட்டின் மேல் கடந்துவிட்டன என விசுவாசிக்க வேண்டும். பாவம் சுமந்த ஆடு இரத்தம் சிந்தி கொல்லப்பட வேண்டும்; அதுவே அது சுமந்திருக்கும் **பாவத்திற்கு பரிகாரம் என்று** அவன் விசுவாசிக்க வேண்டும். அது துள்ளத்துடிக்க மரிப்பதைக் கண்டு, பாவ எண்ணம் இவனுக்கு மாறவேண்டும்; இந்தப்பலி, வரப்போகும் மேசியாவிற்கு நிழல் என்று உணரவேண்டும். எல்லாப் பண்டிகைகளிலும், பஸ்கா பண்டிகையானது இதை அதிகமாய் உணர்த்துவதாய் உள்ளது. இவைகளை எல்லாம் விசுவாசத்தோடே செய்தால், "விடுதலை உண்டு; பாவமன்னிப்பு உண்டு" என்று புரிய வைத்தார். சாலமோன் ஞானிகூட மிகுந்த விசுவாசத்தோடு, மேசியாவின் இரத்தத்தின் மகிமையை உணர்ந்தவனாய், 22000 மாடுகளையும், 1,20000 ஆடுகளையும் பலியிட்டான் (1 ராஜா. 8:63). **ஆனாலும் மனிதன் அதை சட்டமாக, பாரம்பரியமாக செய்தான்.** மனந்திரும்புதலே அவனிடம் இல்லை. பாவங்கள் பெருகின.

**"ஆதி.9:6ன் படி இறுதி பரிகாரம் மனித இரத்தம்தானே!** அது **மனிதனாக வரப்போகும் மேசியாவின் இரத்தம்தானே!**" என்று விசுவாசித்து பலிசெலுத்தியவர்கள் பட்டியல்தான் எபி.11. அந்த எண்ணிக்கையும் மிக மிக மிகக்குறைவு. விசுவாசத்தோடு பலிசெலுத்த வேண்டும் என்பதுதான் தேவனின் விருப்பம்.

**கைகளை வைத்து பாவ அறிக்கை:-** லேவி. 1:3,4; 19:22; 17:11 (".... கர்த்தருடைய சந்நிதியில் தான், அங்கீகரிக்கப்படும்படி, அவன் அதை ஆசரிப்புக் கூடார வாசலில் கொண்டு வந்து, அது தன் பாவ நிவர்த்திக்கென்று அங்கீகரிக்கும்படி தன் கையை அதின் தலையின் மேல் வைத்து").

**அதன் பின் பாவ நிவர்த்தி - பாவப் பரிகாரத்திற்கு பலிசெலுத்தல்:-** யாத்.29:36

("பாவ நிவர்த்திக்காக ஒவ்வொரு நாளிலும் ஒவ்வொரு காளையைப் பாவநிவாரண பலியாகப் பலியிட்டு;....")

இந்த இரண்டும், வரப்போகும் மேசியாவை விசுவாசித்து செய்தால்தான் பாவமன்னிப்பு உண்டு. இயேசு நம் பாவங்களை சுமந்து மரித்தார்; பாவத்திற்கான பரிகாரத் தண்டனையை அனுபவித்து நீதிமானாய் உயிர்த்தார்; நம்மையும் நீதிமானாக்கினார். அல்லேலூயா!

❖ ❖ ❖

# 4. பாவ மன்னிப்பு பற்றி வேதங்களும், உலகமும் சொல்வதென்ன?

நம் வேதம் போல, உலகிலே பல, எழுதப்பட்ட வேதங்கள் உள்ளன. அவைகளில்

(i) கிமு 1200ல் வந்தது சொராஸ்டரின் Zend AvestaD

(ii) கிமு 1100ல் வந்தது 4 ஆரிய வேதம் மற்றும் சீன வேதம்

(iii) கிமு 600ல் வந்தது பிடிக்ஸ் என்னும் புத்தவேதம்

(iv) கிபி 600ல் வந்தது குரான் வேதம்

(v) நம் மோசேயின் வேதம்தான் கி.மு 1600க்கு முன் வந்த முதல் வேதமாகும்.

இந்த எல்லா வேதங்களிலும், நம் வேதத்திற்கு அடுத்தபடியான,

## I. பெரிய வேதமான ஆரிய வேதம் சொல்கிறதாவது:-

**“ஜனங்களை ஆளுகிற பிரஜாபதி தன்னுடைய ஜனங்களின் பாவம் போக்கும்படியாக, தன்னோட சொந்த சரீரத்தையே பிராயச்சித்த பலியாகக் கொடுத்து யக்ஞம் செய்வார்”** - சாம வேதம் பாகம் II - தாண்டீய மஹா பிரமாணம்.

இதன் அடிப்படையில்தான் இன்றும் கூட பல இந்துக் கோயில்களில் பலிசெலுத்தப்படுகின்றது.

## II. அதற்கடுத்த வேதமான குரானில் (குரா. 5:27) :-

ஆபேலும் காயீனும் பலி செலுத்தினார்கள் என்று coimbatore Tamil publication - சொல்கின்றது. ஆங்கில குரானில், “Sacrifice” என்று உள்ளது. (நமது பைபிள் ஆதி. 4 லும் இதைத்தான் சொல்லப்பட்டுள்ளது) குரா 4:9ன் படி, ஒரு கொலைக்கு நஷ்டஈடு கொடுத்து, அல்லது நோன்பு நோற்று பலியிட வேண்டும். நஷ்டஈடு என்பது, குரா. 4:92; 5:89; 2:196; 5:95ன் படி

அது பாவ நிவாரணமாகும். பலியோடு தான் நோன்பு நோற்க வேண்டும் (See குரா.2:196). நோன்பு என்றாலே நம் சரீரத்தை வருத்துவது - இரத்தம் குறைய வைப்பது (அதாவது இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு இல்லை என்பதற்கான செயல்பாடு)

## III. நம் வேதம் சொல்கிறதாவது:-

**இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு இல்லை; பாவநிவாரணத்திற்கு இரத்தம் சிந்தியே ஆக வேண்டும்** (எபி.9:22; லேவி.17:11)

மனித இரத்தம் சிந்தி, எல்லா பாவங்களுக்கும் இறுதி நிவாரணம் தரத்தான் வார்த்தையான தேவன் மனிதனானார் (ஆதி. 9:6 with 1 தீமோ. 3:16; கலா.2:9). பரலோகிலிருந்தே அவரின் சரீரம் வந்தது (எபி.10:5 with சங்.40:6-8 Sepgt); பரலோகிலிருந்தே தேவ இரத்தம் வந்தது (அப்.20:28; மத்.26:28). யோ.6:51; 1 கொரி. 15:47; யோ.8:23; 3:13 போன்ற வசனங்கள் இந்த உண்மையை மேலும் வலுப்படுத்துகின்றது.

## IV. தற்கால நீதிமன்றங்கள்:-

கொலை, கற்பழிப்பு போன்ற குற்றங்களுக்கு, பலிமுறைகளுக்குச் சமமான தூக்குத்தண்டனைகளும், நோன்புக்குச் சமமானமாய் சிறைத்தண்டனையும், பாவ நிவாரணமாய் கொடுக்கப்படுகின்றன.

**மேலும், "ஆதி.9:6ன் படி, பதிலுக்குப் பதில் சாகடித்து, இரத்தம் சிந்தவைத்து தண்டனை கொடுத்துத்தான் பாவநிவாரணமா? வெறுமனே மன்னித்து விட்டால் என்ன?**

இப்படிப் பலர் கேட்கிறார்கள். அப்படிப் பார்த்தால், ஒரு கொலைகாரனை நமது நீதிமன்றம் "உன் பாவம் மன்னிக்கப்பட்டது" என்று சொல்லிவிட்டால் போதுமா? கொலையான குடும்பத்தார் அதை ஏற்றுக் கொள்வார்களா? **ஒரு உதாரணம் சொல்கிறேன் கேளுங்கள்:-** கடந்த நாட்களில் மாண்புமிகு ஜெயலலிதா அவர்களின் கோர்ட் கேஸில் Judgementன் போது, கல்லூரி மாணவிகள் 3 பேர் பஸ்ஸில் எரிக்கப்பட்டார்களே, அவர்களின் அப்பா சொன்னது என்ன தெரியுமா? "குற்றவாளிகள் எல்லோரையும் தண்டிக்க வேண்டும்" என்பதாகும்.

இதனால்தான், "வெறுமனே பாவமன்னிப்பு போதாது; பாவநிவாரணமும் தேவைப்படுகிறது" என்று நம் வேதம் சொல்கின்றது. இயேசுவே, "பிதாவே, இவர்கள் அறியாமல் செய்கிறார்கள். இவர்களை

மன்னியும்" என்றார். **ஆனாலும், இஸ்ரேலரின் பாவங்கள் இன்னும் மன்னிக்கப்படவில்லை.** காரணம், பாவம் செய்தவர்கள் மன்னிப்பும் கேட்கவில்லை; பாவ நிவாரணத்தையும் கண்டு விசுவாசிக்கவில்லை. ரோ.11:25-27; வெளி.1:7; சக.12:10; எரே.23:5,6; ஏசா.59:20, 21 போன்ற வசனங்களின்படி இயேசுவின் 2ம் வருகையில் தான், பாவ நிவாரணத்தோடு கூடிய பாவமன்னிப்பு அவர்களின் விசுவாசத்தால் கிடைக்கும். அல்லேலூயா!

பாவதண்டனை என்பது, பாவத்தன்மைக்கு ஏற்றாற்போல, இருக்கிறது. "இதன் உச்சகட்டம் மரணம்தான்; தூக்குத் தண்டனைதான்" என்றால், அது பெருகிக்கொண்டே போகக் கூடாதல்லவா! **மனிதன் செய்த பாவங்களுக்கு ஆதி.9:6ன் படி மனித இரத்தம் சிந்தி, இறுதி நிவாரணம் தரத்தான், வார்த்தையான தேவன் மனிதனானார்.** இதை விசுவாசிப்பவனுக்கு அவராலே பாவமன்னிப்பு கிடைக்கிறது; பாவ நிவாரணமும் கிடைக்கிறது.

**பாவ நிவாரணமில்லாமல் வாயிலேயே மன்னித்து விடலாமா?**

இது கேள்வி. பாவம் செய்தவரை, பாதிக்கப்பட்டவரே இப்படி மன்னித்துவிட்டால் ஒரு வேளை பாவம் நீங்கலாம்; ஆனால் பாவத்திற்கான தண்டனை என்ன ஆகும்? மனிதனின் குற்றமும் (பாவமும்) தண்டனையும் சேர்ந்து நீங்கினால்தான் அவன் குற்றமற்றவன்; நீதிமான். பாவநிவாரணத்தின் முழுமையே அப்போதுதான். சமீபத்தில், இலங்கையில் 5 தமிழ் மீனவர்கள் தூக்குத்தண்டனை பெற்றார்கள். அவர்களுக்கு விடுதலை கிடைத்தது எப்படி?குற்றம் துடைக்கப்பட்டது கருணையின் அடிப்படையில்தான்; ஆனாலும் அவர்கள் மேலுள்ள தண்டனை என்ன ஆயிற்று? அதை யார் ஏற்று அவர்கள் விடுதலையானார்கள்? கோர்ட்டு விடுதலை பண்ணினாலும், பிற்பாடு பிரச்சனை என்று வரும்போது, முதல்கண் இவர்கள் மேல்தானே வரும்!

மனிதனாய் வந்த இயேசு, பாவங்களை ஏற்க, விலையேறப்பெற்ற இரத்தம் சிந்தி, மிகப் பெரிய தண்டனையாகிய, மோசமான ஈனச் சிலுவை மரணதண்டனையை, அதுவும் சாபச்சிலுவையில் ஏற்றார் (ஏசா.53; கலா.3:13; 2 கொரி. 5:21)

"நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும் படிக்கு, பாவமறியாத அவரை நமக்காக பாவமாக்கினார்" (2 கொரி. 5:21) அல்லேலூயா!

❖ ❖ ❖

# 5. இயேசுவின் இரத்தம் நம்மைக் கழுவுமா?

"இரத்தம் சிந்துதலில்லாமல் பாவமன்னிப்பு இல்லை" என்று எபி.9:22ல் சொல்கின்றது. இது எப்படி சாத்தியமாகும்? ஆதி.9:5, 6 ஐ வாசியுங்கள். மனுஷன் தேவசாயலாய் படைக்கப்பட்ட படியால் (ஆதி.1:26, 27) அந்த மனுஷனுடைய இரத்தத்தை எவன் சிந்தவைக்கிறானோ (அல்லது அந்த மனுஷனுக்கு விரோதமாய் எவன் குற்றம் - பாவம் - தீங்கு செய்கிறானோ) அவன் தேவனை அவமதிக்கிறான் என்று அர்த்தம். தேவனை அவமதிக்கிறவனுக்கு, இந்த உலகில் கொடுக்க முடிந்த மிகப் பெரிய தண்டனை இரத்தம் சிந்துதல் - அதாவது மரணம். இப்படியாய், தேவனே "தண்டனை கொடுத்து பழிவாங்குவேன்" என்று சொல்லியிருப்பதால், மனச்சாட்சியினிமித்தம், ஆபேல் முதற்கொண்டு அனைவரும் மிருகத்தின் இரத்தத்தை சிந்த வைத்து பாவ நிவாரணம் தேடினார்கள். ஆனாலும் முழுமையாய் எவரும் நிவாரணம் அடையவில்லை; மாறாக, பாவம் செய்தவனை கொன்று போட்டாலும், அதனால் பாவமன்னிப்பு ஒருவேளை கிடைத்ததாக எண்ணினாலும், அந்த மன்னிப்பை அவனால் அனுபவிக்க முடியாது. அது யாருக்குமே பயனில்லாமல் போகிறது. ஒருவேளை, கிராமத்து நீதிப்பஞ்சாயத்தின் பார்வைக்கு இது சரியாக இருந்தாலும், இதிலே சம்பந்தப்பட்ட இருவருக்குமே பிரயோஜனமில்லையே!

இதைத்தான் தேவன் ஆதியிலே சிந்தித்தார். இதைத்தான் லேவி.17:11ல் "இரத்தத்தை பலிசெலுத்து" என்று கட்டளையிட்டார். இதை பாவத்திற்கு உண்டான "பரிகாரம் - தண்டனை" செலுத்தும் செயல் என்றார். ஏனெனில் பாவத்தின் முடிவு மரணம் தானே (யாக்.1:15; ரோ.6:23). இப்படியாய் மிருகபலி செலுத்துவதை, உலகத் தோற்றத்திற்கு முன்னே அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியாகிய (வெளி.13:8) மேசியாவின் இரத்தம் சிந்தப்போவதற்கு நிழலாட்டமாய் சொன்னார். அது நிழல்; இவரின் இரத்தம் நிஜம் (கொலோ. 2:16,17). விசுவாசித்தவன் அன்றும் வெற்றி பெற்றான்;இன்றும் வெற்றி பெறுகிறான். அல்லேலூயா! காளை, வெள்ளாட்டுக்கடாயின் இரத்தத்தைவிட இயேசு கிறிஸ்துவின் இரத்தம் விலையேறப் பெற்றது (எபி.10:4) இந்த இரத்தத்தால் மனிதன் பாவமன்னிப்பு பெற்று, தான் இரத்தம் சிந்தாமல், சந்தோசமாய் வாழ்கிறான். கொலோ. 1:13, 14ன் படி அவன் தன் பாவத்தின் தண்டனையாகிய மரணத்தினின்று விடுதலையாகின்றான். என்னே விசுவாசத்தின் மேன்மை!

**அப்படியென்ன நம் இயேசுவின் இரத்தம் விலையேறப் பெற்றது?**

"பலிசெலுத்துவோர், ஒரு செலவு கூட இல்லாமல், ஓசியிலே பலிசெலுத்தினால் அது விசுவாசப் பலியே அல்ல" என்று தாவீது, 2 சாமு. 24:24ல் சொல்வதைப் பாருங்கள். ஆபேலின் பலி எவ்வளவு மேன்மையானது என்று எபி. 11:4ல் சொல்வது காதில் விழுகிறதா? ஆக, பலிப் பொருளுக்கு கண்டிப்பாய் விலை உண்டு; மதிப்பு உண்டு; தரம் தேவை. சாலமோன், தான் கட்டின தேவாலயத்தை பிரதிஷ்டை பண்ணியபோதுதான், மிக, மிக அதிகமான செலவிலே பலிசெலுத்தப்பட்டது என்று வேதம் சொல்கின்றது (1 ராஜா. 8:62-64). இது, இதுவரை சரித்திரம் காணாத பலி முறையாம். 22000 மாடுகளும், 1,20,000 ஆடுகளும் பலியடப்பட்டனவாம். நினைத்துப் பார்க்கவே ஆச்சரியமாய் இருக்கிறது! பலியிடப்பட்டபின் ஓடியிருக்கும் இரத்த வெள்ளத்தை ஒரு கணம் எண்ணிப்பாருங்கள். இக்கால கணக்குப்படி, அந்தப் பலிப் பொருட்களின் மதிப்பு, 13 மில்லியன் அமெரிக்கன் டாலராக, ஏன் சாலமோன் இவ்வளவு செலவழித்தான்? "தனக்காய், தன் மக்களுக்காய், இரத்தம் சிந்தவரப்போகும் மேசியாவின் இரத்தின் விலைக்கு ஈடாய் பலிசெலுத்தவே முடியாது; அது விலையேறப் பெற்றது" என்று அந்த ஞானி விசுவாசித்திருக்க வேண்டும்! அல்லேலூயா! இதை வாசிக்கும் தேவஜனமே! இரட்சிப்பு "CHEAP" அல்ல; விலை மதிக்க முடியாதது. அது ஒருவருக்கு மட்டுமல்ல. அதை விசுவாசிக்கிற அகில உலக ஜனங்கள் எல்லோருக்கும் இலவசமாய் தரப்படுகிறது இயேசுகிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தினால்! அல்லேலூயா! அதுதான் "CHIEF"

(1) நம் இயேசுவின் இரத்தம் சாதாரண இரத்தமல்ல! உலகத்திலுள்ள மேன்மையான வஸ்து பொன். அந்தப் பொன்னையே படைத்தவரின் இரத்தம் இது (1 பேது.1;18, 19)

(2) இது மனிதனின் இரத்தமல்ல. மனிதனின் இரத்தம் ஆதாம் ஜாதியின் பாவ இரத்தம். இது தேவனின் இரத்தம். அப்.20:28 ஐ வாசியுங்கள்.

(3) இயேசு நம்மைப் போல ஆணுக்கும் பெண்ணுக்கும் பிறக்கவில்லை. கன்னியின் வயிற்றில் பிறந்தார்.

(4) எபி.2;14 ஐ வைத்துக் கொண்டு, அது சாதாரண - Ordinary - இரத்தம் என்று சொல்வோரும் உண்டு. "பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, **அவரும் அவர்களைப் போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்.**" அதாவது "நம் இரத்தம் உடையவரானார் - He took part" என்கின்றனர். ஆனால் மூலபாஷையில், "Metechos" என்று

இல்லாமல், "Koinonia" என்றுதான் உள்ளது. அதாவது, "Not shared fully - முழுவதுவாய் அவர் ஆகவில்லை" என்று பொருள். நூற்றுக்கு நூறு மனஷீகம்; நூற்றுக்கு நூறு தெய்வீகம் (கொலோ. 2:9). (தெய்வீகத்தின் Remote பிதாவிடம் உள்ளது.)

(5) மேலும், தேவ இரத்தம், மரியாளின் கருமுட்டையோடு இணைந்து (Egg fertilisation) இயேசு உருப்பெற்றிருப்பார் என்றும் சிலர் சொல்கின்றனர். இது முழுக்க, முழுக்க தவறு. எபி.10:5; சங். 40:6-8 Septgt. ஐ வாசியுங்கள். பரலோகிலேயே இயேசுவின் சரீரம் (மாமிசம் + இரத்தம்) கருவாக உருவாக்கப்பட்டு, பரிசுத்த ஆவியானவரால், மரியாளின் கர்ப்பப்பைக்குள் வைக்கப்பட்டு, 10 மாதத்தில் வளர்ந்தது. (See யோ.6:51; 1 கொரி. 15:47; யோ.3:18; 8:23) எனவே மனித இரத்தக் கலப்பே இயேசுவின் இரத்தத்தில் இல்லை. இது விலையேறப்பெற்றது. தொப்பூழ்க்கொடி மூலம் உணவின் சத்துக்கள் தான் அனுப்பப்படுகிறது. **அப்படியே தாயின் இரத்தம் போயிருந்தாலும், இன்றைய DNA சோதனையில் குழந்தை யாரை வெளிப்படுத்துகிறது? தாயையா? தந்தையையா?** தந்தையைத் தானே! அப்படியே தேவனைத்தான் வெளிப்படுத்துகிறது இயேசுவின் சரீர இரத்தம். ஆமென். (இது குறித்து ஆசிரியரின், "விசுவாசித்தேன்! ஆகையால் பேசுகிறேன்! - பாகம் 2"ல் உள்ள, "அன்னை மரியாளைப் பற்றிய அநேக கேள்விகள் - I, II" என்ற செய்திகளை வாசியுங்கள்.

(6) மரியாள், கன்னியாயிருந்து இயேசு பிறந்தார் என்று விசுவாசித்து விட்டாலே இந்த கேள்விகளெல்லாம் எழாது (see ஏசா. 7:14; மத். 1:25)

(7) மனித இரத்தத்தில் இருப்பது மனித ஜீவன் (லேவி. 17:11). மனிதன் மரித்தால், இந்த இரத்தத்தில்ஜீவனில்லாமல் போகும். ஆனால் இயேசுவின் இரத்தத்தில் இருப்பதோ, நித்திய ஜீவன். இது இன்றைக்கும் பரலோகில் ஜீவனோடு பேசிக் கொண்டிருக்கிறது (எபி.12:24; எபி. 9:11, 12) அல்லேலூயா!

(8) எல்லாவற்றுக்கும் மேலாக, "இது பாவமன்னிப்பு உண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது" (மத்.26:28) என்ற இயேசுவின் வார்த்தையே, தேவனின் இரத்தத்திற்கான பெரிய சாட்சியாயிருக்கிறது. ஆமென், (See 1 கொரி.15:3; ரோ. 5: 6-8; கலா.1:4; கொலோ. 1:14.20, 22; 2 கொரி. 5:29; யோ. 1:29).

**இந்த விலையேறப்பெற்ற இரத்தம் சிந்துதலினால் நமக்கு என்ன பிரயோஜனம்?**

(1) சாத்தானின் அதிகாரத்திலிருந்து விடுதலை (கொலோ. 1:13; எபே.1:17; எபி. 9:12)

(2) நம் பாவங்கள் அனைத்தும் கழுவப்பட்டாயிற்று; பழைய பாவங்கள் ஒழிந்தன (1 யோ. 1:7-9)

(3) பாவமனிதன் நீதிமானாக்கப்படுகிறான் (ரோ.3:23; 5:9; 2 கொரி. 5:21; 1 கொரி.6:11)

(4) தேவ பிரசன்னத்தில் செல்ல வழி நமக்குக் கிடைத்துள்ளது (எபி.10:19, 20)

(5) நாம் பரித்தமாக்கப்படுகிறோம் (எபி.9:14; 2 தீமோ. 1:7)

(6) பிசாசை ஜெயிக்கிறோம் (வெளி.12:11)

(7) சாபங்கள் தீர்ந்தன (கலா.3:13)

(8) நித்திய ஜீவன் நமக்குண்டு; நரகமில்லை (யோ.1:29; 3:16, 17)

இன்னும் ஏராளம் உண்டு. இந்த விலையேறப்பெற்ற இரத்தத்தை, வருஷத்துக்கு ஒருமுறையோ, மாதம் ஒரு முறையோ, வாரம் ஒரு முறையோ நினையாமல், அனுதினமும் நினைப்போம்! விசுவாசிப்போம்! உலகத்தை ஜெயிப்போம்! வெற்றி வாழ்க்கை வாழ்வோம் (1 யோ.5:4) அல்லேலூயா!

❖ ❖ ❖

# 6. கன்னியின் வயிற்றில் ஏன் பிறந்தார்?

“ஒரு கன்னியின் வயிற்றில் இயேசு பிறந்தாரே ஏன்? நம்மைப் போல் ஆணுக்கும் பெண்ணுக்கும் ஏன் மகனாய் பிறந்திருக்ககூடாது? அல்லது பரலோகத்திலிருந்தே ஏன் நேரே வந்திருக்க கூடாது?” இப்படியெல்லாம் கேள்விகள் கிறிஸ்தவ வட்டாரத்திலே எழுப்பப்பட்டு பதில் சொல்லமுடியாமல் பதுக்கி வைக்கப்பட்டுள்ளன. பதுக்கப்பட்ட கேள்விகளுக்கு பரிசுத்த ஆவியானவர் தெளிவுபடுத்துகிறார் இப்போது! அல்லேலூயா! தேவன் மனுஷனைப் படைத்தபின் சொன்னார்:- “நீங்கள் பலுகி பெருகி பூமியை நிரப்பி அதைக் கீழ்ப்படுத்தி சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின் மேல் நடமாடுகிற ஜந்துக்களையும் ஆண்டு கொள்ளுங்கள்” (ஆதி. 1:28).

உலகத்தையே ஆளப்பிறந்தவனுக்கு, ஆண்டு கொள்ள அதிகாரம் பெற்றவனுக்கு, சுமார் 1500 ஆண்டுகளுக்குப் பின் வந்த நிலைமையைப் பாருங்கள்; தேவன் நோவாவையும் அவன் குமாரரையும் ஆசீர்வதித்து, "நீங்கள் பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள்" (ஆதி. 9:11) என்றார். மனிதனுக்கு "பூமியை கீழ்ப்படுத்தி, ஆண்டுகொள்ள வேண்டும்" என்ற பழைய உரிமை இல்லாமற் போய்விட்டது. ஏன்? ஆதாம், ஏவாள், ஏதேன் தோட்டத்திலே செய்த கீழ்ப்படியாமையாகிய விசுவாச துரோகம் என்னும் பாவத்தினால், இந்த நிலை ஏற்பட்டது. இந்த ஆளும் உரிமை இப்பொழுது யாரிடம் இருக்கிறது? பிசாசிடம் இருக்கிறது (மத். 4:9; லூக். 4:6). அவன் இப்பிரபஞ்சத்தின் தேவனாகி விட்டான். (2 கொரி. 4:4) தேவன் அளித்த அனைத்தையும், ஏன் தன்னையுமே தாரைவார்த்துக் கொடுத்து விட்டான் ஆதிமனிதன். அதனால் உலகமும் உலகத்தாரும் பிசாசுக்கு அடிமை; பிசாசின் பிடியில். இப்படியாய் பிசாசாகிய மார்வாடிக்காரன் கையில் உள்ள உலகை, பிசாசாகிய போலீஸ் ஜெயிலுள்ள உலகை மீட்டெடுக்க வேண்டும் என்பது தேவனின் அநாதி தீர்மானம்; நம்மீது அவர் கொண்ட அன்பு. இதைத்தான் ஆதி. 3:15லேயே வெளிப்படுத்துகிறார். தொடர்ந்து இயேசுவின் பிறப்பு வரையிலும் தீர்க்கதரிசிகள் மூலமாய் இதையே திருவுளம் பற்றினார்.

**ஓர் ஆள் ஜெயிலில் இருக்கின்றான் என்றால் அவனை வெளியே கொண்டு வர தேவையானவை:-**

1. ஒரு நல்ல ஜாமீன்தார்
2. அவர் இந்த நாட்டை சேர்ந்தவராய் இருக்க வேண்டும்.
3. ஜாமீன் தொகை.

பிசாசின் ஜெயிலில் உள்ள மனுஷனையும் அவனுக்குண்டானவை களையும் ஜாமீனில் கொண்டுவர மனுஷன் ஒருவன் தேவை. ஆடோ, மாடோ மனுஷனுக்கு ஜாமீன் கொடுக்க முடியாது. உலகத்தானை மீட்க உலகத்தான் தான் தேவை. தேவதூதரோ வேறு யாரோ மீட்க முடியாது. வானிலிருந்து யார் குதித்து வந்தாலும் அவன் மனிதனல்லவே! பெண்ணின் வயிற்றில் 10 மாதம் இருந்து பிறந்தால் தானே அவன் மனிதன். எனவே தான் யேசு நம்மைப்போல இந்த உலகத்தானாய், பெண்ணின் வயிற்றிலிருந்து, உலகின் மையப்பகுதியான இஸ்ரேல் தேசத்தில் உலக மனிதனாய் அவதரித்தார். அல்லேலூயா! (கலா. 4:5).

அப்படி ஜாமீன் கொடுக்கிற ஆள் நல்லவராய் இருக்க வேண்டுமல்லவா! "தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனுமில்லையே" (லூக். 18:19);

"நீதிமான் ஒருவனாகிலுமில்லை. உணர்வுள்ளவன் இல்லை. எல்லோரும் வழி தப்பி ஏகமாய் கெட்டுப் போனார்கள். நன்மை செய்கிறவன் இல்லை; ஒருவனாகிலும் இல்லை" (ரோ. 3:10-12) உலகிலே உள்ள "ஒருவனும் நல்லவன் இல்லையென்று வேதம் திட்டமாய்ச் சொல்கின்றது.

இப்படியாய் மனிதகுலம் ஆனதற்கு தனிப்பட்டவனின் பாவச் செயல்தான் காரணமா? இல்லவே இல்லை. அவன் பாவ ஜாதியில் பிறந்ததால் பாவியானான். "ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டனர்." (ரோ. 5:19). ஆதாமின் வித்தினால் பிறந்த எல்லோருமே பாவிதான். இப்படிப் போல இயேசுவும் பிறந்திருந்தால் அவரும் பாவிதான். பாவியாகிய அவர், பாவிகளான நமக்கு ஜாமீன் கொடுக்க முடியாதே! ஒரு கொலைக்காரன் இன்னொரு கொலைக்காரனுக்கு ஜாமீன் கொடுக்க முடியாதல்லவா! அதனால் தான் இயேசு, நம்மைப் போல் ஆணுக்கும், பெண்ணுக்கும் பிறக்கவில்லை. மனிதனாய்ப் பிறந்து நல்லவனாய் இருந்தால் தான் ஜாமீன் ஏற்றுக் கொள்ளப்படும். பிறக்கும் போதே நல்லவனாய் பிறந்தால்தானே, நல்லவன் லிஸ்டில் வருகிறான். பாவ ஜாதியில் பாவி என்ற முத்திரையோடு பிறப்பவன் நல்லவன் இல்லையே! எனவே தான் ஆதாமின் வித்தினால், பாவ ரத்தத்தால் இயேசு பிறக்கவில்லை. "ஆணின் இரத்தத்தினால் தான் பாவசாயல் இருக்கிறதா? பெண்ணின் வயிற்றிலிருந்து இயேசு பிறந்ததால் பெண்ணின் ரத்தம் இணைந்திருக்குமே பெண்ணின் இரத்தத்திற்கு மட்டும் பாவசாயல் இல்லையா" இது கேள்வி.

விஞ்ஞான உலகில் வாழும் நமக்கு இஃதெல்லாம் எளிதாய்ப் புரியும். "பெண்ணின் கருப்பையிலே வளர்கிற குழந்தைக்கு ஒரு போதும் பெண்ணின் ரத்தம் சேர்வதேயில்லை. பெண்ணிடமிருந்து உணவுச் சத்துப் பொருள்கள் தான், தொப்புள்கொடி மூலமாக குழந்தைக்குப் போகுமே ஒழிய ரத்தம் போவதில்லை" இது மருத்துவ உலகம் ஒத்துக் கொண்டது. எனவே தாயின் ரத்தம் பாவசாயலான ரத்தமானாலும், ஒருக்காலும் அது மழலையின் கருவோடு சேர்வதில்லை. ஆக, இயேசு கன்னியின் வயிற்றில், பாவமில்லாத நல்லவராய் உலக மனிதராய்ப் பிறந்து நமக்கு ஜாமீன் கொடுத்தார். அல்லேலூயா! ஒருவேளை பெண்ணின் இரத்தம் சேரும் என்றாலும், மழலையின் வித்து ஆணுடைய இரத்தம்தானே! அது, இயேசுவின் காரியத்தில் தேவனுடைய வித்து - இரத்தம் தானே!

உலகிலே மனிதன் ஜாமீனுக்காய் சொத்து, சுகம் எல்லாமே கொடுப்பான். ஆனால் அவனால் கொடுக்க இயலாதது உயிர்தான்.

உயிரையும் ஜாமீன் பொருளாய் ஒருவன் கொடுக்கிறான் என்றால், அதற்கு மேலும் ஜாமீன் பொருள் உலகில் ஒன்றுமே இல்லை. இந்த உயிர் எங்கே இருக்கிறது? இரத்தத்தில் இருக்கிறது. (ஆதி. 9:4; லேவி. 17:11). அதனால்தான் இயேசு ரத்தம் சிந்தி நம்மை மீட்டுக் கொண்டார். (1 கொரி. 16:20) இந்த ரத்தம் சாதாரண ரத்தமல்ல; தேவனின் இரத்தம், விலையேறப்பெற்ற ரத்தம்; அவரின் சுயரத்தம் (அப். 20:28). அதனால்தான் பிசாசானவன் இயேசுவின் ரத்தம் என்ற உடனே ஓடியே போகிறான்.

நம் தேவன் கன்னியின் வயிற்றில் தேவ ரத்தத்தால் நல்ல மனிதனாய்ப் பிறந்து ரத்தம் சிந்தி ஜாமீன் கொடுத்து நம்மை மீட்டு, மறுபடியும் நம்மை பூமியைக் கீழ்ப்படுத்தி ஆண்டு கொள்கிற ராஜாக்களும் ஆசாரியர்களுமாய் ஆக்கியிருக்கிறார். (1 பேதுரு 2:9) விசுவாசிப்போம். வெற்றி பெறுவோம்.

❖ ❖ ❖

# 7. இயேசுவின் இரத்தம் நரபலி இரத்தமா?

நம் தேவன் எப்போதுமே நரபலியை - மனிதப்பலியை விரும்பாதவர்; வெறுக்கிறவர். (உபா.2:3; 18:10; லேவி. 18:21; 20:1; எரே. 19:5; எசே. 16:21; 23; 37; 20:31) அதனால் தானே ஈசாக்கை பலியிட அனுமதிக்கவில்லை. யெப்தாவும் தன் மகளை பலியிடவில்லை என்று வேதம் விளக்குகிறது. ஆனால் மனிதனாய் இருந்த இயேசு பலியானாரே! அது நரபலியல்லவா! அந்த இரத்தம் நரபலி இரத்தமல்லவா! **தேவன் விரும்பாத இந்த காரியத்தை நாம் எப்படி ஏற்க முடியும்?** இது கேள்வி. இது குறித்து பலகாரியங்கள் புரிய வேண்டியிருக்கிறது.

(1) இயேசு மனித உருவில் வந்தார். ஆனால் தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாய் அவருக்குள் வாசமாயிருந்தது (கொலோ. 2:9)

(2) பரலோகிலே உருவாக்கப்பட்ட சரீரம் பரலோகிலும் இருக்க முடியும்; பூமியிலும் இருக்க முடியும். (எபி.10:5; சங்.40:6-8 septgt; யோ. 6:51; 1 கொரி. 5:47; யோ. 3:13; 823) அதனால்தான் அதே சரீரத்தோடு பிதாவின் வலது பாரிசத்தில் அமர்ந்து நமக்காய் பரிந்து பேசிக் கொண்டிருக்கிறார் (1 யோ. 2:1,2). அதே சரீரத்தோடுதான் இறுதி நியாயத் தீர்ப்புவரை இருப்பார் (அப்.17:31). ஆனால் மனிதனுடைய

சரீரமோ, தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிக்க மாட்டாது; இது அழிவுள்ளது. அழியாமையை சுதந்தரிப்பதில்லை (1 கொரி. 15:50).

(3) நாம் ஏற்கெனவே பார்த்ததுபோல, இவரது சரீரமும் இரத்தமும் வானிலிருந்து வந்தது. இன்றும் ஜீவனோடிருக்கிறது (யோ.6: 51; எபி.12:24). எனவே இது நர - மனித - பலியுமல்ல; மனிதபலி ரத்தமுமல்ல.

(4) கன்னிக்குப் பிறந்ததால் இவர் முழு உலக மனிதரல்ல; நூற்றுக்கு நூறு தேவன்; நூற்றுக்குநூறு மனிதன். (கொலோ. 2:9)

(5) நமக்காய் சிந்தப்பட்டது மனித ரத்தமல்ல; தேவரத்தம் (அப்.20:28)

நமது இயேசு மரித்து, மண்ணோடு மண்ணாய்ப் போயிருந்தால், இவர் பலி நரபலி - மனிதபலி என்று சொல்லலாம். ஆனால், சொன்னபடியே மரித்து, சொன்னபடியே 3ம் நாள் உயிரோடு எழும்பியதால் (வெளி.1:18), இது நரபலியல்ல; இது விசேஷித்தபலி; நம் பாவம் போக்க சிந்தப்பட்ட விலையேறப்பெற்ற தேவ இரத்தப்பலி; உலக இரத்தபலியல்ல. இந்த இரத்தப்பலியால்தானே, உலகின் சகல பாவங்களும் சுத்தரிக்கப்படுகின்றது; சகல பாவத்தண்டனைக்கான பரிகாரமாய் இது இருக்கின்றது. எனவே நம் இயேசுவின் பலியை "ஜீவபலி" என்று சொல்லலாம். இதனால்தான், ரோ.12:1ன் படி, நாமும் பாவத்திற்கு மரித்து, நீதிக்குப் பிழைத்து ஜீவபலியாயிருக்க தேவன் விரும்புகிறார். நாமும் அந்த ஜீவபலியை விசுவாசிக்கும் போது நீதிமானாகிறோம். அல்லேலூயா! இதனால்தான், கத்தோலிக்க சபையார், இதை அறிந்தோ, அறியாமலோ, "திருப்பலி" என்று சரியாய் பெயரிட்டு ஆசரிக்கின்றனர்.

இது குறித்து "பாவநிவாரண நாள்" பண்டிகையை தியானித்தால் விவரம் புரியும். அங்கே, பலியாடு, போக்காடு என்று இரண்டு ஆடுகள் ஆசரிப்புக்கூடாரத்திற்கு கொண்டு வரப்படும். அந்த இரண்டுமே இயேசுவுக்கு நிழலாட்டமாயிருக்கிறது. எப்படி? பலியாட்டின் மேல் கரங்களை வைத்து, எல்லாப் பாவங்களும் அதன் மேல் சுமத்தப்பட்டு, அது பலியாக்கப்படும். அந்தப்பலியின் இரத்தத்தை மகாபரிசுத்தஸ்தலம் மட்டும் ஆசாரியன் கொண்டு போய் தெளித்து விட்டு, உயிரோடிருக்கும் அந்த போக்காட்டின் மேல் தண்டனையை சுமத்தி துரத்திவிடுவான். ஆக, இங்கே ஒரு காரியத்தைப் பார்க்க வேண்டும். மரித்த பலியாட்டு நிலையோடு சடங்காச்சாரம் முடிவடைந்திருந்தால், இது இயேசுவின் சிலுவைப் பலியோடு முடிந்ததாய் காணப்படும். இயேசு மரித்து, உயிர்த்தெழுந்து ஜீவனானதற்கு அடையாளமாய் போக்காடு இருப்பதால், இது மனிதரின் நரபலியாகாது.;

பாவத்திற்கு மரித்து நீதிக்கு உயிர்த்தெழுந்த தேவனின் ஜீவபலியாய், திருப்பலியாய் இது மாறியிருக்கிறது. பாவமன்னிப்புக்கென்று உலகத் தோற்றத்திற்கு முன்பே தேவனால் அங்கீகரிக்கப்பட்ட தியாகபலி இது. இன்றும் ஜீவனுள்ளதாய் இருப்பதால்தானே இன்றும் மனிதர்கள் இரட்சிக்கப் படுகின்றார்கள். அல்லேலூயா! **பரலோகிலும் இன்னும் ஜீவனோடிருக்கும் தேவ இரத்தம், நரபலியிலிருந்து வந்திருக்க முடியாதே!** ஆமென்! (இந்த பாவ நிவாரண நாள் பண்டிகை, இயேசு 2ம் முறை வரும்போது, அவரைக் கண்டு இரட்சிக்கப்படுவதற்கான விசுவாசத்தை உண்டாக்கும் பண்டிகையாய் இஸ்ரேலருக்கு இருக்கிறது. நமக்கோ இது இரத்தம் சிந்தி மரித்து, உயிர்த்த கிறிஸ்துவுக்கு நிழலாட்டமாயிருக்கிறது). அல்லேலூயா!

❖ ❖ ❖

# 8. பைபிளை வைத்து மட்டும் இரத்தம் சிந்தி இயேசு பாவம் போக்கினார் என்று எப்படி நம்புவது?

இது கிறிஸ்தவரல்லாத - இரட்சிக்கப்படாத - மக்கள் மட்டும் கேட்கிற கேள்வி என்று எடுத்துக் கொள்ளக்கூடாது. இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவர் களுக்குக் கூட இப்படிப்பட்ட கேள்விகள் உண்டு. அதை யாரிடம் எப்படிக்கேட்பது, புரிந்துகொள்வது என்று பலர் தவியாய்த் தவித்து, தங்களுக்குள்ளே மூடிவைத்துக் கொண்டு வாழ்வை நகர்த்துகின்றனர். இப்படிப்பட்ட எல்லோருக்குமே இந்த செய்தி பிரயோஜனமாய் இருக்குமென்று கர்த்தருக்குள் நான் நம்பி இதை எழுத வைக்கிறார் ஆவியானவர். அல்லேலூயா!

நாம் வைத்திருக்கிற இந்த வேதத்திற்கு மிஞ்சி வேறே எந்த வேதமும் உலகில் இல்லை. எனவே இதில் சொல்வதெல்லாம் உண்மை என்று நம்புகிறோம்.

மேலும், நமது இந்தியாவின் சுதந்திரத்திற்காக, வீரபாண்டிய கட்டபொம்மன், பாரதியார், வ.உ.சிதம்பரனார், மகாத்மா காந்தி போன்ற பலர் போராடி மரித்தார்கள் என்று நம்புகிறோம். மகாத்மா காந்திக்கு முன்னிருந்த சுதந்திரப் போராட்ட தியாகிகள் போட்ட வித்திலேதான், இறுதியாக, மகாத்மா காந்தி நமக்கு சுதந்திரம் வாங்கித் தந்தார் என்றும் நம்புகிறோம். **இப்படி நம்பியிருக்கிற நமக்கு ஒரு சில கேள்விகள்.**

1) **சுதந்திரப்போராட்ட தியாகி வீரபாண்டிய கட்டபொம்மன்** எங்காவது, இந்தியர்களுக்கு விடுதலை வேண்டும் என்று போராடினாரா? அதனால்தான், வெள்ளையரால், கயத்தாரில் தூக்கிலடப்பட்டு சொல்லப்பட்டாரா? இல்லையே... கட்டபொம்மன், கப்பம் (வரி - கிஸ்தி) கட்டாததால்தான் தூக்கிலடப்பட்டான். **இது எப்படி இந்தியாவின் விடுதலைக்கான காரியமாகும்?**

2) **அப்படியே செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம்பரனார்.** எங்காவது, முழு இந்தியர்களுக்கு விடுதலை - ஆட்சி - வேண்டும் என்று போராடினாரா? அதனால்தான் அவர் தியாகியானாரா? சிந்தியுங்கள். நமது கடலில், இலவசமாய் கப்பலோட்டியதற்காக அவருக்கு வெள்ளையரால் சிறைவாசம். **இது எப்படி நமக்கு விடுதலைக்கான காரியமாகும்?**

3) **அப்படியே, கவிஞர் பாரதியார்** எங்காவது இந்தியர்களுக்கு விடுதலை வேண்டும் என்று **போராடினாரா?** இல்லையே! அவர் செய்ததெல்லாம், தூங்கிக்கொண்டிருந்த தமிழனை தட்டியெழுப்பி விடுதலைக்காய் பாடியதால், விடுதலைக்காய் எழுதியதால், அவருக்கு வெள்ளையரின் முன்னே எதிர்ப்பு வந்தது. **இவர் எப்படி நமக்கு விடுதலை வாங்கித் தந்தார் என்று சொல்ல முடியும்?**

இப்படி ஏராளம் கேட்டுக் கொண்டே போகலாம்; முடிவு என்ன? வெள்ளையர்களால் இவர்கள் அடிமைப்படுத்தப்பட்டிருந்த நிலையில், அந்தந்த காலகட்டத்திற்கான அடிமைத்தளை நீங்கவேண்டும் என்று அவர்கள் எழும்பியதால்தான் - அவர்கள் இரத்தம் சிந்தியதால்தான் - அந்த விடுதலை வேட்கை, பின்னால் வந்த சந்ததிக்கு புயலாய், பெருவெள்ளமாய் எழும்பியது; **விடுதலையின் உண்மைத் தத்துவத்தை அவர்களின் தியாக இரத்தம் உணர வைத்தது.** இப்படியாய் ஏராளமானோர் இரத்தம் சிந்திய நிலையில், இறுதியில் வந்தவர்தான் நம் தேசத்தந்தை மகாத்மா. ஏற்கெனவே தியாகிகளின் இரத்தத்தின்மேல் போடப்பட்டு முளைத்தெழுந்த விதை, இவரால் வளர்க்கப்பட்டு கனி கிடைத்தது. ஆக, இரத்தம் சிந்திய அத்தனைபேரும், "முழு இந்திய சுதந்திரம்" என்ற வார்த்தையை உபயோகிக்காவிட்டாலும், அவர்களின் ஒவ்வொரு தியாகச் செயலும், சுதந்திரத்திற்கான காரணத்தை, காரியத்தை மக்களுக்குள்ளே புகுத்தியது என்பது மறுக்கமுடியாத உண்மை. ஆக, அழிந்துபோகிற மனித இரத்தங்களாலேயே, சுதந்திரம் கிடைத்ததென்றால்; அந்த இரத்தங்களுக்கே சுதந்திரத்தைப் பெற்றுக்

கொள்ளத் தக்கான வல்லமை உள்ளதென்றால், மனிதனாய் வந்த இயேசுவுக்குள்ளிருந்த தேவ இரத்தம் எப்படிப்பட்ட வல்லமை உள்ளதாய் இருந்திருக்க வேண்டும் என்பதை சிந்தித்துப் பாருங்கள்; அதனாலே உலகத்தின் பாவங்கள் எல்லாம் சுமந்து தீர்க்கப்பட்டிருக்கும் என்பதை தியானித்துப்பாருங்கள்.

காந்தியின் சுதந்திர போராட்ட முயற்சியோடு, அவருக்குமுன் பலபேர், ஏதோ ஒரு சில காரணங்களுக்காக இரத்தம் சிந்தி மரித்து, விடுதலை வித்தை விதைத்துப் போனதால்தானே, 1947ல் அவரால் சுதந்திரம் வாங்க முடிந்தது. கப்பம் கட்டுவது அடிமைத்தனம் என்பது கட்டபொம்மனின் இரத்தத்தால் புரிந்தது; நம்கடலில் கப்பலோட்ட தடை வருவது அடிமைத்தனத்தின் உச்சகட்டம் என்று வ. உ. சியால் புரிந்தது. **இதே போலத்தான்,**

**"பூர்வ காலங்களில் பங்குபங்காகவும், வகை வகையாகவும், தீர்க்க தரிசிகள் மூலமாயத் திருவுளம் பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்கு திருவுளம் பற்றினார்."** (எபி.1:1,2). அல்லேலூயா!

தேவன், இயேசுவுக்கு முன்னால் அனுப்பிய தீர்க்கதரிசிகளையும், ஞானிகளையும், வேதபாரகரையும் இஸ்ரேலர்கள் இரத்தம் சிந்த வைத்து கொன்றார்கள். இதைத்தான் இயேசு சொன்னார்: "நீதிமானாகிய ஆபலேின் இரத்தம் முதல் தேவாலயத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே நீங்கள் கொலை செய்த பரகியாவின் குமாரனாகிய சகரியாவின் இரத்தம் வரைக்கும், பூமியின் மேல் சிந்தப்பட்ட நீதிமான்களின் இரத்தப்பழியெல்லாம் உங்கள்மேல் வரும்படியாக இப்படிச் செய்வீர்கள்" (மத்.23:35). இப்படி இரத்தம் சிந்தி சிந்தி மரித்தவர்களின் செயல்பாடுகளை, வரப்போகிற மேசியாவோடு இணைத்து இஸ்ரேலர்கள் விசுவாசித்திருந்தால், மேசியாவின் இரத்தத்திற்கு நிழலான காளை, வெள்ளாட்டுகடா இரத்தத்தை இஸ்ரேலர்கள் விசுவாசித்திருந்தால், எபி.11ல் உள்ள விசுவாச வீரர்கள் பட்டியலில் அனைவரும் இணைந்திருப்பார்கள். ஆக, இரத்தம் சிந்துதலை விசுவாசித்து செயல்படும் போது தான் பாவமன்னிப்பு கிடைத்து நீதிமானாய் மாற்றப்படுகிறோம் என்று அறிகிறோம்.

❖ ❖ ❖

# 9. இயேசு எப்படி பாவ மன்னிப்புக்கு வித்திட்டார்?

கட்டபொம்மன், வ.உ.சி, திருப்பூர்குமரன் போன்றோரின் இரத்தமெல்லாம், மகாத்மாவின் மூலமாய், விடுதலைக்கு வித்திட்டது என்று பார்த்தோம். ஆனால், இயேசுவின் 3 $^1/_2$ வருட ஊழியம், பாவமன்னிப்புக்கு வித்திட்டதுமன்றி, பாவமன்னிப்பையே தந்து விட்டுப்போனது. இயேசுவுக்கு முன்னால் வாழ்ந்து மரித்தவர்களை வைத்தே பலகாரியங்களை அவர் சொல்லிக் கொடுத்தார்; தானும் செய்து காட்டினார். இவர் செய்த நன்மையான செயல்கள், நமக்கு இரட்சிப்புக்கு ஏற்றதாயிருக்க, பிரதான ஆசாரியக் கூட்டமோ, அவர் மேல் அவைகளையே குற்றம் சாட்டி, நமக்கு விடுதலை - ஆசீர்வாதம் கிடைக்காதபடி வழி செய்தனர். இறுதி வெற்றியோ இயேசுவுக்குதான். **இயேசு, இரத்தம் சிந்த அவர்கள் கொடுத்த குற்றச்சாட்டுகள் ஏராளம். அவைகளில் ஒரு சில :-**

**(1) ஓய்வு நாள் கட்டளையை மீறினாராம் (யோ.5:18) :-**

சீனாய் மலையில் அவரே கொடுத்த கட்டளையை (அப்.7:53, 38) அவர் மீறுவாரா? சிந்தியுங்கள். அவர் மீறவில்லை. இஸ்ரேலரோ, "தல்மூத்" போன்ற மனித கற்பனைகளைக்கொண்டு, பாரம்பரியத்தினால், தேவ கற்பனையை அவமாக்கினார்கள் (மத்.15:39), எனவே ஓய்வு நாளை எப்படி, ஏன் ஆசரிக்க வேண்டும் என்று செய்து காட்டினார். இது தான் அவர்கள் பார்வையில் குற்றமாயிற்று. அதனாலேயே அவர் இரத்தம் சிந்தினார் என்றால், அதை விசுவாசிக்கும் நாம் அவர்போல் வசனப்படி நடந்து, புதிய பாதையை - இரட்சிப்பின் பாதையை அடைய முடியுமல்லவா! என்னே தேவ ரத்தம்!

**(2) தேவனை தன் சொந்த பிதா என்றும், தான் தேவனுக்கு சமமென்றும் கூறினாராம் (யோ. 5:18):-**

அவர்கள் அனுமானம் தவறு. அவர் மரணபரியந்தம் பிதாவுக்கு தன்னைத் தாழ்த்தினார்; "தான் சுயமாய் ஏதும் செய்யாமல் பிதா சொல்லியதே செய்தார்" என்றெல்லாம் அவர் வாயாலேயே வேதத்தில் சொல்லப்பட்டிருக்க, எப்படி அவர் பிதாவுக்கு சமம் என்று சொல்லியிருப்பார்? (See பிலி. 2:6-8). அவருடைய பிதாவும், நம்முடைய பிதாவும் வேறு என்று எப்படிச் சொல்லியிருப்பார்? (See. யோ.20:17). இயேசுவின் பேச்சு - தாற்பரியம் எல்லாம் நாம் புரிய வேண்டும். புரிந்தால்தான், வார்த்தையானவர்

மனிதனாய் வந்த செயல்களால், நமக்கு பிசாசிலிருந்து விடுதலை கிடைக்கும். அதுதானே இரட்சிப்பு.

**(3) ராஜா என்று சொன்னாராம் (யோ. 8:37):-**

அது இஸ்ரேலருக்கான உலக ராஜா என்று அல்ல; ஆவிக்குரிய ராஜா என்று சொன்னார். அதுவும் நமது வாழ்வு மலரவே சொன்னார். இந்த ராஜாவை பின்பற்றி, உலக சிநேகத்தை வெறுக்க சொல்லிக் கொடுக்கிறார் (மத்.6:24; யாக்.4:4). இதனால் நமக்கு பாவம், சாபம், சாத்தான் மூன்றிலிருந்தும் விடுதலை - இரட்சிப்பு கிடைக்கிறது. நாமும் ராஜாக்களாகிறோம் (1 பேது. 2:9; வெளி.1:6) இப்படியாய் இவர் மீது குற்றம் சாட்டி, இவர் இரத்தம் சிந்தி மரிக்கவில்லை என்றால் நமக்கு இந்த உன்னதமான இரட்சிப்பும், உயர்வும் கிடைத்திருக்காது. அந்தகாரமான இருளிலேயே இருந்திருப்போம்; ஆச்சரியமான ஒளியின் இரட்சிப்பால், பாவக்காரியங்களிலிருந்து அடிமைத்தனத்திலிருந்து, பாவத்திலிருந்து விடுதலையே கிடைத்திருக்காது.

**(4) "பலி, பண்டிகை எல்லாம் சடங்கல்ல; தேவாலயம் வியாபாரஸ்தலமல்ல" என்று இயேசு கடிந்து கொண்டது, அவர்கள் மரணத்திற்கு ஒப்புக் கொடுத்ததற்கான ஒரு காரணம்.**

ஏன் சொன்னார்? சிந்திப்பாரில்லை. சடங்காச்சாரத்தால் பயனில்லையே! தேவ பிரசன்னத்தை உணராவிட்டால் தேவாலயத்தில் சாபம்தானே! இப்படியாய் நமது விடுதலைக்காய் அவர் செய்ததால் அவர் குற்றப்படுத்தப்பட்டு இரத்தம் சிந்த வேண்டியதாயிற்று. இந்த இரத்தமே, நாம் அப்படி தவறாய்க் கொண்டிருக்கும் நமது பாவங்களிலிருந்து, விடுதலை அளிக்கிறது. அல்லேலூயா!

**(5) "நல்ல சமாரியன்; கெட்ட குமாரன்" போன்றவைகளால் அன்பை வெளிப்படுத்தி, தேவ அன்பை நமக்குச் சொன்னதால் எதிர்ப்பு!**

இஸ்ரேலர்களோ, இவர் காட்டும் அன்பை ஏளனம் செய்தார்கள் (See யோ. 13:32); இவரை சிலுவையிலறைந்து இரத்தம் சிந்த வைத்து கொன்றார்கள். சிலுவையில்கூட "இவர்களை மன்னியும்" என்று தானே கூறினார். என்னே இவரது தேவ அன்பு! இந்த அன்பு இருந்தால் தானே, மாம்சக் கிரியைகள் நம்மிடத்திலிருந்து மாறி, நாம் விடுதலை - இரட்சிப்படைந்து, ஆவியின் கனி, நீதியின் கனியைக் காட்ட முடியும்; நித்திய ஜீவன் கிடைக்கும். இவரது ஒவ்வொரு செயலும் இவர் மரித்து உயிர்த்ததாலே, நமக்கு வெளிச்சமாயிருக்கிறது. ஆமென்.

**(6) பரலோக வாசலை வேதபாரகர்கள் மூடிவைத்திருந்ததால், மலைப்பிரசங்கம் போன்றவற்றால் புரியாதவர்களுக்கு இயேசு விளக்கியது, இஸ்ரேலருக்கு எரிச்சலானது.**

எரிச்சலின் உச்சகட்டம் சிலுவை மரணமாயிற்று. இப்படிப்பட்ட இயேசுவின் செயலால், சபையார் உண்மையைக் கண்டு, அவர்களை வெறுத்து விடுவார்களோ என்ற பயம் நிறைந்த கோபத்தால் நடந்தது அது. அன்று கட்டபொம்மனை தூக்கிலிட்டதுபோல! அதனால் இந்தியருக்கு சுதந்திரம் கிடைத்தது. இயேசுவின் மரணத்தால் நமக்கு நித்திய ஜீவன் உறுதியாயிற்று! அல்லேலூயா! இந்திய சுதந்திரம் தற்காலிகமானது; தேவமரணத்தால் வந்த இரட்சிப்போ - விடுதலையோ - சுதந்திரமோ, நித்தியமானது.

**(7) துள்ளதுள்ள, துடிதுடித்து, இரத்தம் சிந்தி உயிர்விடும் ஆடுமாடுகளுக்கு நிஜமாய், தான் பலியாக வந்ததை விசுவாசிக்க போதித்தார்; அது அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை.**

இது அவர்களுக்கு வெறுப்பை உண்டாக்கியது; அவர்கள் கிண்டலும் கேலியும் செய்தனர். இதன்முடிவு இரத்தம் சிந்துவதாய் இருந்ததால், அந்த இரத்தமே நமக்கு ஜீவனாகவும், இரட்சிப்பாகவும், தைரியமாகவும் ஆகியது. அல்லேலூயா! (See யோ. 6:51, 52).

**(8) "திறப்பின் வாசலில் நின்று தன் ஜீவன் தந்தார் இயேசு" என்பது அவர்களுக்குப் புரியவில்லை.**

நம் எல்லோருக்கும் "Peter was a Dutch Boy" என்ற கதை தெரியும். ஒரு சிறுவன் நடந்து வரும்போது, ஏரியின் கரையிலே ஒரு ஓட்டை விழுந்து, தண்ணீர் வேகமாய் வெளிவருவதைக் கண்டான். அந்த திறந்த ஓட்டை அடைபடாமலிருந்தால், ஏரிக்கரையே உடைந்து, அந்த கிராமமே அழிந்து போகும் என்றெண்ணி, தன் விரலை வைத்து அந்த ஓட்டையை அடைத்தான். வெளிவரும் தண்ணீர் நின்றுவிட்டது. இப்போது சிறுவன் விரலை எடுத்துவிட்டால், மறுபடியும் பேராபத்து வரும் என்றெண்ணி, இராமுழுவதும், கொட்டும் பனியில் விரலை எடுக்காமலே இருந்தான். காலையிலே வந்த ஊர்மக்கள் அவன் அப்படியே மரித்துப் போனதைக் கண்டனர். திறப்பின் வாசலை அவன் தன் ஜீவனைக் கொடுத்து மூடியதால், அந்த கிராமமே பிழைத்தது - பாதுகாக்கப்பட்டது - Saved. இப்படித்தான் நம் தேவனும்.

அன்று வனாந்திரத்திலே இஸ்ரேல் மக்கள், இரட்சகரை மறந்து கன்றுக்குட்டியை வணங்கியதால் அவர்களை நாசம் பண்ண எத்தணித்தார்

தேவன். "அப்பொழுது அவரால் தெரிந்து கொள்ளப்பட்ட மோசே, அவர்களை அவர் அழிக்காத படிக்கு, அவருடைய உக்கிரத்தை ஆற்றும் பொருட்டு, அவருக்கு முன்பாக திறப்பின் வாயிலிலே நின்றான்" (சங். 106:23). இதனால் அவர்கள் அத்தனை பேரும் பாதுகாக்கப்பட்டனர் (யாத். 32: 30-34). அந்த மோசே போல, உயிரைப் பணயம் வைத்து, வரப்போகும் தேவகோபக்கினைக்குத் தப்பும்படியாய், திறப்பின் வாசலில் நின்று ஜீவனைக் கொடுக்க யார்தான் உண்டு என்று தேவன் தேடினார்; தேடினார். ஒருவரும் முன்வரவில்லை. (எசே. 22:30; 13:5; ஏசா.58:12).

**"நான் தேசத்தை அழிக்காதபடிக்குக் திறப்பிலே நிற்கவும், சுவரை அடைக்கவும் தக்கதாக ஒரு மனிதனைத் தேடினேன். ஒருவனையும் காணேன்."**

இறுதியில் வார்த்தையான தேவனே, திறப்பின் வாயிலில் நின்று மரிக்கும் மனிதனாய் பூமிக்கு வந்தார்; மரித்தார். இதனால், இதை விசுவாசிக்கும் எல்லோருக்கும், பாதுகாப்பு - ஜீவன் - விடுதலை - இரட்சிப்பு கிடைத்தது. மரணபயம் ஏதுமில்லை. **கர்த்தர் தேடினார்; இயேசு செய்து முடித்தார். இனி யாரும் திறப்பின் வாசலில் நிற்கத் தேவை இல்லை.** திறப்பின் வாசலில் யாரும் நிற்க வேண்டாம் என்று சொல்லிக் கொடுத்து, நம்மை பரலோகம் கொண்டு செல்கிறார். **இனி மேலும் யாராவது திறப்பின் வாசலில் நிற்கிறேன்; நிற்க வேண்டும் என்று சொன்னால், அவர்கள் இரத்தம் சிந்தி மரித்த இயேசுவின் முதலாம் வருகையை அவமதிக்கிறவர்கள்;** அந்தி கிறிஸ்துவின் ஆவியை உடையவர்கள் (1 யோ. 4:1-3).

இப்படி ஏராளம் சொல்லிக் கொண்டே போகலாம். ஆக, இயேசுவின் இரத்தம் சிந்தப்பட்டது நமது இரட்சிப்புக்காக; விடுதலைக்காக; பாவமன்னிப்புக்காக; பாவப்பரிகாரத்திற்காக; வெற்றி வாழ்க்கைக்காக. அல்லேலூயா! ஆமென்.

"திறப்பின் வாசலில் நின்றவர்;
மரித்து நம்மைக் காத்தவர் (2)
மண்ணில் இப்படி வாழ்ந்தவர் யாரைய்யா? (2)
மரணத்தை ஜெயித்த இயேசு தானய்யா
இயேசுவையே துதி இயேசுவையே ஆர்ப்பரி
இயேசுவையே விசுவாசி - அல்லேலூயா (2)

1. கன்றுக்குட்டியை வணங்கிய மக்கள்
என்றும் வாழ்ந்திட திறப்பினில் நின்றான்
அவன்தான் அன்றைய மோசே (2)
இவன்போல் யார்தான் பூமியில் உண்டு
ஏங்கின தேவன் கண்டார் அன்று
அவரே இரட்சகர் இயேசு (2) - இயேசுவையே

2. திறப்பின் வாசலில் இயேசு நின்று
இறப்பால் எல்லாம் முடித்தார் அன்று
இனிமேல் யார்தான் தேவை (2)
இயேசுவின் இரத்தம் செய்ததை மிஞ்சி
இன்று நடக்கும் செயல்கள் எல்லாம்
கள்ள கிறிஸ்துவின் சேவை (2) - இயேசுவையே

3. திறப்பின் வாசலில் நின்ற இயேசுவை
மறந்து எங்கோ போகிறாய் நீயும்
பொல்லாத காலம் தோழா (2)
மன்னன் இயேசுவை மனதில் எண்ணி
உந்தன் சபையில் நிலைத்திரு நீயும்
நல்லது நடக்கும் நண்பா, நல்லது நடக்கும் தோழா
- திறப்பின் வாசலில்

(நன்றி:- "விடுதலை முழக்க கீதங்கள்" Vol. III)

❖ ❖ ❖

# 10. இயேசு இரத்தம் சிந்தும் முன்னே பாவம் மன்னிக்கப்படாதா?

இதுவரை, இரத்தம் சிந்தித்தான் பாவமன்னிப்பு; பாவநிவாரணம் என்று அறிந்து கொண்டோம். அப்படியானால், இயேசு மனிதனாய் வந்தபோதே, சிலுவையிலே இரத்தம் சிந்தாததற்கு முன்னமேயே பாவங்களை மன்னித்திருக்கிறாரே, அது எப்படி என்று கேள்விகள் எழும்புவது இயற்கையே! இந்தக் காரியம் எல்லோருக்கும் நடந்திருக்காது. "ஆத்மாவிற்காக பாவநிவர்த்தி இரத்தமே" என்பதை (லேவி.17:11) யார்

யாரெல்லாம் உணர்ந்து, வரப்போகும் மேசியாவுக்கு நிழலாய் பலிசெலுத்துகிறார்களோ, பண்டிகை கொண்டாடுகிறார்களோ அவர்களின் விசுவாசத்தின் அளவை அறிந்து மன்னித்திருக்கிறார். மட்டுமல்ல... "இவரே பாவத்திற்கு பரிகாரி" என்று விசுவாசித்தவர்களுக்கு மன்னித்திருக்கிறார். மற்றப்படி "இரத்தம் சிந்தின பின்னே தான் பாவமன்னிப்பு; அதற்கு முன் கிடையாது" என்று சட்டமில்லை. உலகத் தோற்றத்திற்கு முன்பே அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி இயேசு (வெளி.13:8). எனவே, அந்த மேசியாவின் இரத்தம் சிந்துதலின் தாற்பரியத்தை உணர்ந்து, விசுவாசத்தோடே கிரியைகளில் காட்டிய அத்தனை பேருக்குமே பாவமன்னிப்பு ஆதிமுதலே உண்டு. சிலுவைக்கு முன் உள்ள விசுவாசிகள் (எபி.11), வரப்போகிற மேசியாவை விசுவாசித்தார்கள். சிலுவைக்குப் பின் உள்ள விசுவாசிகளாகிய நாமோ, வந்த மேசியாவை விசுவாசிக்கிறோம். மொத்தத்தில், "இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு இல்லை" (எபி.9:22) என்கிற விசுவாசமே பாவமன்னிப்பு தரும்; பாவ நிவாரணம் தரும்.

எனவே, இதை வாசிக்கும் தேவ ஜனமே!

(1) பாவ நிவர்த்தி இல்லாமல் பாவமன்னிப்பு இல்லை.

(2) அது இயேசுவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலேதான் உண்டு.

(3) அதனால், அதை விசுவாசிப்பதினால், பாவமும் தண்டனையும் நீக்கப்படுகிறது.

(4) இயேசு பாவத்திற்கு மரித்து, நீதிக்கு பிழைத்தார் என்பதை விசுவாசிக்கும்போது நாம் நீதிமானாகிறோம்.

(5) இப்படிப்பட்ட கிரியையோடு கூடிய விசுவாசத்தில் முடிவு பரியந்தம் நிலைத்திருக்கும்போது, வருகையில் எடுத்துக் கொள்ளப்படுவோம்.

**இப்படிப்பட்ட பாவ நிவாரணம், வேறு எங்காவது உண்டென்றால் சொல்லுங்கள்; அதை ஏற்றுக் கொள்ள தயாராயிருக்கிறோம்.**

இயேசு சீக்கிரம் வருகிறார்! ஆயத்தமாவோம்!! ஆயத்தமாக்குவோம்!!!

**"விசுவாசம் வெற்றியைத்தரும்"**

**"FAITH BRINGS SUCCESS"**

❖ ❖ ❖

# 11. பிற்சேர்க்கை

## (1) இயேசு மரிப்பார் என்று பழைய ஏற்பாட்டில் வசனம் உண்டா?

"இயேசு மரித்தார்; உயிர்த்தார் என்பதை, பழைய ஏற்பாட்டுக் காரியங்களோடு - சடங்காச்சாரங்களோடு - பண்டிகைகளோடு - பொருத்தி, பவுலும் பேதுருவும் விளக்குவதால்தான் புரிகிறது. மற்றப்படி "இயேசு மரிப்பார் என்பதற்கான வசனங்கள் பழைய ஏற்பாட்டில் இல்லை" என்றும், பவுல், "பொய் பொய்யாக பல கருத்துக்களைப் புனைந்துள்ளார்" என்றும் இந்தக் காலக்கட்டத்தில் பலர் குற்றம் சுமத்துகின்றனர். கீழ்க்காணும் பழைய ஏற்பாட்டு வசனங்களைப் புரிந்தாலே போதும்; உண்மை புரியும்.

(a) **தானி. 9:26:-** "அந்த 62 வாரங்களுக்குப் பின்பு மேசியா சங்கரிக்கப்படுவார்". எப்போது என்ற காலமும் சொல்லப்பட்டிருக்கிறது.

(b) **சங். 118:22- 24:-** "வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே மூலைக்குத் தலைக்கல்" (see எபே.2:19-21; 1 பேது. 2:4-7). சிலுவையிலறைந்து தள்ளப்பட்ட கல் இயேசு.

(c) **ஏசா. 25:8:-** "அவர் மரணத்தை ஜெயமாக விழுங்குவார்". தேவனுக்கு மரணமே இல்லை (1 தீமோ.6:16; யாத்.3:14). மரித்து மரணத்தை ஜெயமாக விழுங்க வேண்டுமென்றால், மனிதனாய் மாறி வந்தால்தான் முடியும் (ஆதி.3:19; எபி.9:27). அப்படி வந்தவர்தான் இயேசு (ஏசா.9:6; 7:14; யோ.1:1,14; பிலி.2:6-8).

(d) **சக. 12:10:-** "நான் தாவீதின் குடும்பத்தாரின் மேலும், எருசலேம் குடிகளின் மேலும், கிருபையின் ஆவியையும், விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன். அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப் பார்த்து, ஒருவன் தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறதுபோல, எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காக துக்கிக்கிறது போல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்". ஆக இஸ்ரேலர்கள்தான் கொல்வார்கள் என்று எழுதப்பட்டிருக்கிறது (see வெளி.1:17 சக.13:6,7; மத்.26:31).

(e) **லேவி. 17:11:-** "ஆத்மாவிற்காக பாவநிவிர்த்தி செய்கிறது இரத்தமே". ஆக, இரத்தம் சிந்துதலில்லாமல் பாவ மன்னிப்பு இல்லை என்று இயேசுவுக்கு நிழலாட்டமான பலிமுறைகளை செய்தனர் (see எபி.9:22; மத்.26:28; லேவி.1:4; 4:16; 19:22; யாத்.29:36).

(f) **எண். 21:9:-** "மோசே ஒரு வெண்கல சர்ப்பத்தை உண்டாக்கி, அதை ஒரு கம்பத்தின்மேல் தூக்கி வைத்தான்" (see யோ.3:14,15; 2 கொரி.5:21). இயேசு சிலுவையிலறையப்பட்டதற்கான நிழலான காரியம் இது.

(g) **ஏசா. 53:12:-** "அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி, அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு.." (see 2 கொரி.5:21; யோ.3:16).

(h) **ஆதி. 9:6:-** "மனுஷன் தேவசாயலில் உண்டாக்கப்பட்டபடியால், மனுஷனுடை இரத்தத்தை எவன் சிந்துகிறானோ, அவனுடைய இரத்தம் **மனுஷனாலே** சிந்தப்படக்கடவது." பாவப்பரிகாரம் முழுமையடைய வந்த மனுஷன் இயேசு (யோ. 1:1,14).

இன்னும் ஏராளம் சொல்லிக் கொண்டே போகலாம். அவர், பழைய ஏற்பாட்டில் சொன்னபடியே பிறந்தார்; சொன்னபடியே மரித்தார்; சொன்னபடியே உயிர்த்தார்; சொன்னபடியே மீண்டும் வருவார். ஆமென்!

❖ ❖ ❖

## (2) இயேசு உயிர்த்தெழுவார் என்பதற்கான முன்னறிவிப்பு பழைய ஏற்பாட்டில் உண்டா?

"இயேசு மரித்தார்; உயிர்த்தார் என்பதை பழைய ஏற்பாட்டுக் காரியங்களோடு - சடங்காச்சாரங்களோடு - பண்டிகைகளோடு - பொருத்தி பவுலும், பேதுருவும் விளக்குவதால்தான் நமக்குப் புரிகிறது. மற்றப்படி இயேசு உயிர்ப்பார் என்பதற்கான வசனங்கள் பழைய ஏற்பாட்டில் இல்லை என்றும், பவுல் பொய் பொய்யாக பல கருத்துக்களை புனைந்துள்ளார்" என்றும் இந்தக் காலக் கட்டத்தில் பலர் குற்றம் சுமத்துகின்றனர். கீழ்க்காணும் பழைய ஏற்பாட்டு வசனங்களைப் புரிந்தாலே போதும், உண்மை புரியும்.

(a) **சங். 2:7:-** "தீர்மானத்தின் விபரம் சொல்லுவேன்; கர்த்தர் என்னை நோக்கி, நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன்" (see அப்.13:32,33; எபி.1:15; 5:5). இந்த அதிகாரம் முழுவதும் கிறிஸ்துவாகிய இயேசுவைப் பற்றியது. "ஜெநிப்பித்தல்" என்றால் "பிறத்தல்; மரணத்தினின்று பிறத்தல் - உயிர்த்தெழுதல் -" என்று பொருள்.

(b) **சங். 118:22-24:-** "வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே மூலைக்கு தலைக்கல். அது கர்த்தராலே ஆயிற்று. அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது. இது கர்த்தர் உண்டு பண்ணின நாள்; இதிலே களிகூர்ந்து மகிழக்கடவோம்" (see எபே.2:19-21; 1 பேது.2:4-7). சிலுவையிலறைந்த தள்ளப்பட்ட கல்லாகிய இயேசு. உயிர்த்தெழுந்ததால் மத்.16:18ன் படி கட்டப்பட்ட சபைக்கு மூலைக்கல்லானார்.

(c) **ஏசா. 25:18:-** "அவர் மரணத்தை ஜெயமாக விழுங்குவார்" (see 1 தெச.4:13- 18; ஓசி. 13:14; 1 கொரி 15; 51-55; ரோ.8:11).

(d) **சங். 16:10:-** "என் ஆத்துமாவை பாதாளத்தில் விடீர்; உம்முடைய பரிசுத்தவானை அழிவைக் காணவொட்டீர்" (see 2:31).

(e) **சங். 66:18:-** "தேவரீர் உன்னதத்திற்கு ஏறி, சிறைப்பட்டவர்களை சிறைக்கொண்டு போனீர்" (see எபே.4:8,9).

(f) **சங். 132:11:-** "உன் கர்ப்பத்தின் கனியை உன் சிங்காசனத்தில் மேல் வைப்பேன்" (see அப்.2:30; with சங்.132:6-10). இன்னும் ஏராளம் சொல்லிக் கொண்டே போகலாம். நம் தேவன் சொல்லுகிறதைச் செய்கிறவர்; செய்கிறதை மாத்திரமே சொல்லுகிறவர். அவர் பழைய ஏற்பாட்டில் சொன்னபடியே பிறந்தார்; சொன்னபடியே மரித்தார்; சொன்னபடியே உயிர்த்தார்; சொன்னபடியே மீண்டும் வருவார்; ஆள்வார். அல்லேலூயா!

❖ ❖ ❖

## (3) மேசியா எதற்கு வருவார் என்று பழைய ஏற்பாடு சொல்கின்றது? (இஸ்ரவேலருக்கு சொல்லிக் கொடுங்கள்)

மேசியா (Heb) மற்றும் கிறிஸ்து (Grk) என்றால், வரப்போகிறவர்; அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்று பல அர்த்தங்கள் உள்ளன. சீனாய் மலையில் பழைய ஏற்பாடு ஆரம்பம்; இயேசுவின் சிலுவை மரணத்தில் புதிய ஏற்பாடு ஆரம்பம். அதுவரை வாழ்ந்த மக்கள் வரப்போகிற கிறிஸ்து - மேசியாவை, தேவகுமாரன் என்று எண்ணி, அவரை தெய்வமாகவே விசுவாசித்தார்கள். (யோ.12:34; மத்.26:68,69). 1 சாமு.2:10; 35; சங்.45:7;

ஏசா.61:1; யோ 1:41; 4:25; மாற்.8:29; யோ.6:69; யோ.3:28; 7:26, 27, 31, 41; 10:24; 11:26; 9:2; மத்.22:41-46 போன்ற பல வசனங்களை வாசித்தால், மேசியா வருவார் என்றும், "இயேசுவா அந்த மேசியா?" என்ற ஐயப்பாடு இருந்தது என்றும் நாமறிவோம். இதனால்தான், இன்றும் கூட எருசலேமிலுள்ள அழுகையின் சுவருக்கு (weeping wall) முன் நின்று, மேசியாவே வாரும் என்று அழுவதையும் காத்திருப்பதையும் கண்கூடாய்ப் பார்க்கிறோம்.

**இந்த மேசியா எதற்கு வருவார் என்று இஸ்ரேலர்கள் விசுவாசிக்கிறார்கள் தெரியுமா?**

(1) ஆதி.12:2ன் மூலம் அவர் ஆசீர்வாதங்களை அள்ளித் தருவார் என்று விசுவாசித்தனர்.

(2) ஆதி.49:10; எண்.24:17; உபா.18:18; ஏசா.11; ஆகாய் 2:7; மல்.3:1; மீகா.5:2 போன்றவைகளின் மூலம், தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்ட மேசியா வந்து தங்களை ஒரு பெரிய ஜாதியாக்கி உலகம் முழுவதையும் அரசாளுவார் என்று நம்பினர்.

(3) லூக்.24:21; அப்.1:5ஐ வாசித்தால், இயேசுவின் சீஷர்கள்கூட ஆட்சியைத்தான் நம்பினர்.

(4) மேசியா தாவீதின் சந்ததியிலே பிறப்பார் என்றும், தாவீதின் ராஜ்யத்தை ஆளுவார் என்றும் இஸ்ரேலர்கள் அறிந்து விசுவாசித்தினாலல்லவோ (அப்.2:30; சங்.12:2,132:11, 2 சாமு. 7:12). இயேசுவின் முதல் வருகையிலேயே "தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா" என்று பாடி, குருத்தோலைபிடித்து அவரை எருசலேமுக்கு கொண்டு போய் ராஜாவாக்க நினைத்தார்கள்.

(5) ஏசா.9:6,7; எரே.23:5,6 போன்ற வசனங்களை விசுவாசித்து, (லூக்.1:32, 33; அப்.15:17) மேசியா ஆளவும், ஆளுகை தரவும் வருவார் என்று நம்பினர்.

இஸ்ரேலரின் பெரும்பாலான சரித்திரம் அடிமைத்தனத்திலேயே இருந்ததினால் (எகிப்து, அசீரியா, பாபிலோன், முகமதியர், மேதியபெர்சியர், கிரேக்கர், ரோமர், பிரிட்டிஷார் மற்றும் ஹிட்லர், துருக்கியர் போன்ற பல ஜாதியாரின் கீழிருந்தனர்) அவர்களுக்கு நிரந்தரமான விடுதலை வேண்டும் என்ற தாகமும், அதை வரப்போகிற மேசியா தந்தே தீருவார் என்ற விசுவாசமும் அவர்களிடம் அன்று முதல் இருந்து கொண்டே இருக்கிறது.

இயேசுவின் முதலாம் வருகையிலேயே அவர்களுக்கு ஆட்சி அமைந்திருந்தால், அவரே மேசியா என்று தொழுது வணங்கியிருப்பர். இன்றுகூட 1948ல் ஏதோ ஒரு சிறு பகுதி பிரிட்டிஷாரிடமிருந்து கிடைத்து ஆண்டாலும், அதிலே அவர்கள் திருப்தியடையவில்லை. ஆதி.15:18-21 ல் ஆபிரகாமிடம் சொல்லப்பட்ட அந்த முழு பாலஸ்தீனா தேசமும் கிடைக்க வேண்டும் என்றுதான் தினந்தோறும் போராடிக் கொண்டிருக்கின்றனர்.

**இது அவர்களின் பார்வையின், நம்பிக்கையின் ஒருபுறம்.** இயேசு சொன்னார்:- “வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; என்னைக் குறித்து சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே” (யோ.5:39). அப்படியானால் இந்த மேசியாவின் வேறு காரியங்களும் வேதத்தில் உள்ளனவா? என்ன அவை?

(1) ஆதி.3:15ன் மூலம், பிசாசை ஜெயிக்கக் கூடிய ஒருவர் வந்து பாவம், சாபம், மரணம் எல்லாம் மாற்றுவார் என்று வேதவசனம் சொல்கின்றது.

(2) சங்.16, 22,40 போன்ற அதிகாரங்களில் மேசியா அடையப்போகிற பாடுகளை சொல்லியிருக்கிறான் தாவீது.

(3) ஏசா.53ல் முழுவதும் மேசியாவின் பாடுகளையும் மரணத்தையும் பற்றி சொல்லப்பட்டுள்ளது. “அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி, அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு அநேகருடைய பாவத்தை தாமே சுமந்து அக்கிரமக்காரருக்காக வேண்டிக் கொண்டதின் நிமித்தம் அநேகரை அவருக்குப் பங்காகக் கொடுப்பேன்” (ஏசா.53:12) see 2 கொரி.5:21; மத்.26:28; லேவி.17:11; யோ.1:29; கலா.1:4; கொலோ.1:14;

(4) தானி.9:25-26ல் மேசியா சங்கரிக்கப்படுவார் என்று சொல்லப்பட்டுள்ளது. (**“ஆனாலும் தமக்காக அல்ல”**)

(5) சக.12:10; வெளி.1:7 போன்ற வசனங்களின்படி யூதரே அவரைக் கொல்வார்கள் என்று உள்ளது.

(6) ஏசா.25:8; சங்.118:22-24 போன்ற பல வசனங்களின்படி அவர் மரித்து, உயிர்த்தெழுவார் என்று உள்ளது.

(7) கி.பி.70ல் எருசலேம் ஆலயம் அழிக்கப்பட்டு, யூதர்கள் சிதறடிக்கப்பட்டதால், யூதர்களின் எபிரேயு மற்றும் கிரேக்க செப்டுவாஜிந் வேதப் புத்தகங்கள் பல காணாமல் போய்விட்டன.

கி.பி. 95வாக்கில், திரும்பி வந்த சனகெரீம் மன்றத்தார் கண்டுபிடித்த புத்தகங்கள்தான் நாம் வைத்திருக்கும் 39. (இவை இலண்டன் மியூசியத்தில் உள்ளன) கண்டுபிடிக்க முடியாமல், அழிந்து போன புத்தகங்களில் மேசியா பற்றி ஏராளம் இருக்கும் என்று நம்புகிறோம். இதைத்தான், லூக்.24:27, 44-46 மற்றும் யோ.5:39ல் இயேசுவும், 1 கொரி. 15:3,4ல் பவுலும், அப். 3:18ல் பேதுருவும் சொல்லி யிருக்கிறார்கள் என்று நிதானிக்கலாம்.

(8) ஆபேலின் பலி மேன்மையான பலி என்றதினாலே (ஆதி.4:7; எபி.11:4) அது எப்படி என்று கண்டு, மேசியாவை அறியலாமே.

(9) ஈசோப்பு என்ற சாதாரண செடியினால், தண்ணீரிலும், இரத்தத்திலும் தெளித்தாலே பாவ மன்னிப்பு என்றால், இதன் தாற்பரியம் அறியலாமே (லேவி.14; எண். 19).

(10) பாவநிவாண நாள் பண்டிகையின், பலியாடு, போக்காடு விவரங்கள் புரிந்திருக்க வேண்டுமே (லேவி.23).

(11) ஆபீப் 14 - பஸ்கா; ஆபீப் 16 முதற்பலன் - இப்படியான பண்டிகைகளை தியானிக்க வேண்டாமா? (லேவி23).

(12) சங்.118:22-24; ஏசா.28:16 போன்ற வசனம் சொல்லும் தள்ளப்பட்ட கல்லைக் குறித்து, தியானிக்க வேண்டாமா?

இந்த இஸ்ரேலர், ஆளுகை சம்பந்தப்பட்ட தீர்க்கதரிசனங்களை மட்டும் நம்பி, இம்மைக்குரியவைகளுக்காக மாத்திரம் இருப்பதால் எல்லா இனத்தாரைப் பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருக்கிறார்கள் (1 கொரி. 15:19) தீர்க்கதரிசன விளக்கங்களை புரிந்து கொள்ள அவர்களின் மனக்கண்களை பிசாசு குருடாக்கி வைத்திருக்கிறான் (2 கொரி.4:4). தீர்க்கதரிசனமெல்லாம் ஒருகாலத்தில் மனுஷருடைய சித்தத்தினால் உண்டாகாமல், தேவனுடைய பரிசுத்த மனிதர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டு பேசினார்கள். அந்த தீர்க்கதரிசனங்களிலே இயேசுவின் வருகை இரண்டு உண்டு என்று அவர்களுக்குப் புரியவில்லை. (See ஏசா.61:1-3 with லூக். 4:16-20; சக. 14:4; ஆகா. 2:6,7).

**ஆளுகைக்கே முக்கியத்துவம் கொடுக்கிற இஸ்ரேலர், அவர்களின் இழப்புக்கு காரணம் என்ன என்று அவர்கள் உணரவில்லை.** அப்படியே உணர்ந்தாலும் அதிலிருந்து விடுதலையாவதில்லை. தானியேல், எஸ்றா, நெகேமியா போன்றோரின் ஜெபங்களை பார்த்தோமானால், அடிமைத்தனம்

வந்ததே யூதர்களின் பாவங்களினால் தான் என்று அறியலாம். அப்படி என்னதான் பாவம் செய்தார்கள்? அந்நிய நுகப்பிணைப்பு, விக்ரக ஆராதனை இவை இரண்டும்தான் தேவனின் பார்வையில் அன்றும் இன்றும் பெரிய பாவமாயிருக்கிறது. 40 வருட வனாந்திர வாழ்க்கையிலும், கானான் தேசத்திலும் இந்தப் பாவங்களைத் தான் தேவன் முக்கியப்படுத்துகிறார். இவைகள் தேவனுக்கு விரோதமானவைகள். இவைகளிலிருந்து விடுதலையானாலே சகமனிதர்களுக்கு விரோதமாய் பாவம் செய்யமாட்டார்கள். இப்படிப்பட்ட, பாவங்களால், சாபங்கள், அழிவுகள், மரணங்கள் பெருகுகின்றன. இது ஆதாமிலிருந்து ஆரம்பம். இவைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி - விடுதலை - நிவாரணம் வேண்டுமென்றால் அதற்கு மேலான தண்டனை இரத்தம் சிந்துதல்தான் (ஆதி.9:6; லேவி.17:11; எபி.9:22). இதனால் மனித இனம் அழியக்கூடாது என்று (மல்.2:15), பாவ நிவாரணபலி, குற்ற நிவாரணபலி போன்ற பலி முறைகளையும், பண்டிகைகளையும் இஸ்ரேலருக்கு உருவாக்கினார். அந்த மிருகம் துள்ளத்துடிக்க பலியானாலும், அதற்கு நிஜமாய் இயேசு வந்து தம்முடைய பாவங்களுக்காய் சங்கரிக்கப்படுவார் என்றுதான் மேலே சொன்ன தீர்க்கதரிசனங்களில் தேவன் விளக்கினார். இதை அவர்கள் விசுவாசித்து செயல்பட்டாலே, பாவம், சாபம், தண்டனைகள் மாறி அவர்களுக்கு தாங்கள் விரும்பும் ஆட்சி அவராலேயே கிடைக்கும் என்பதைக் காட்டவே, "மனந்திரும்புங்கள்" என்று தன் பிரசங்கத்தை முதல் வருகையில் ஆரம்பித்தார். மனந்திரும்பாமல், இயேசுவை மேசியா என்று விசுவாசிக்காமல் கொன்று போட்டார்கள்; பாவங்கள் முழுவதும் தீராமல் தங்கள் மேல் சேர்த்துக் கொண்டனர் (மத். 27:25). ஆனாலும் வேதவாக்கியங்களின்படி மரித்த இயேசு உயிர்த்தார்; பரலோகம் போய்விட்டார்; மீண்டும் வருவார்.

வரப்போகும் அந்திகிறிஸ்துவின் ஆட்சியிலே, இதற்கு மேலும் மகா உபத்திரவப்படுவார்கள் என்றும், 3 தேவதூதர்களாலும், 2 சாட்சிகளாலும், 1,44,000 பேராலும் அவர்களுக்கு மேசியாவை - இயேசுவை - விசுவாசிக்கத் தக்கதான தருணம் வருமென்றும் வேதம் சொல்கின்றது. அப்போதுதான், எரே.31:31-33ல் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனத்தை (முதலாம் வருகையில் நடந்தது) விசுவாசித்து, இன்று அவர்கள் ஏற்றுக் கொள்ளாமல் நமக்கு வந்து நாம் அனுபவிக்கும் அந்த புது உடன்படிக்கையை (எபி.8:10) அவர்களும் அனுபவிப்பார்கள். அல்லேலூயா! மேசியாவைப்பற்றி, பலி முறைகளுக்கு நிஜமான அவரின் மரணம் உயிர்த்தெழுதலால் ஆத்ம இளைப்பாறுதல்

(மத்.11:28-30) அவர்களுக்கு கிடைப்பதால், அவர்களின் மீது விழுந்த பாவம் சாபம் - தண்டனைகள் எல்லாம் அவர்களின் மனமாற்றத்தின் நிமித்தம் (வெளி.1:7; சக.12:10; மத்.24:31) நீங்கிப் போகும்; இதனால் அவர்களுக்கு கிடைக்க வேண்டிய ஆசீர்வாதமான ஆட்சிக்கு வழி கிடைக்கும்; அவர்கள் 1000 வருடம் ஆளுவார்கள். அல்லேலூயா!

இதை வாசிக்கும் தேவஜனமே! தேவ ஆவியால் ஏவப்பட்டு மேசியாபற்றி எழுதப்பட்ட வேத வாக்கியங்களை, பிசாசுக்கு இடங்கொடாமல் ஆவியானவரின் ஒத்தாசையோடு தியானித்து விசுவாசித்து செயல்படும்போது, இஸ்ரேலருக்கு மட்டுமல்ல; நமக்கும் பேராசீர்வாதம் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை. உலகத்தை விட்டு, அதாவது பாவம், மாம்சம், பிசாசைவிட்டு வெளியேறி, பிசாசை சிலுவையில் வென்ற இயேசுவை, இயேசுவின் வார்த்தையை கட்டிப் பிடித்துக் கொள்வோம்! என்றும் ஆனந்தம்! ஆமென்!

❖ ❖ ❖

## (4) "பலிமுறைகள் இயேசுவுக்கு நிழல் என்று யூதர்களுக்குத் தெரியாதா?"

தேவனுடைய பிள்ளைகளே, "வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளில் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக் குறித்து சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே" (யோ.5:39) என்று இயேசு சொன்னதிலிருந்து, நித்திய ஜீவனை யூதர்கள் வாஞ்சித்திருக்கிறார்கள் என்றும், அது நமது இயேசுவால்தான் என்று முழுமையாய் அவர்கள் அறிந்திருக்கவில்லை என்றும், சிலுவையில் இயேசு சொன்ன முதல் வார்த்தை இதை உறுதிப்படுத்துகிறது. ஆனாலும், மேசியா - கிறிஸ்து - கர்த்தருடைய தூதனானவர் - பற்றி அறிந்திருக்கிறார்கள்; அவர் வருவார் என்றும் அறிந்திருக்கிறார்கள். அது பற்றிய முழு வசன விளக்கத்தை அனைத்து யூதருக்கும் கிடைக்கக் கூடாதபடிக்கு பிசாசானவன் அவர்கள் மனக்கண்களை குருடாக்கி வைத்திருந்தான் (2 கொரி.4:4) என்பதுதான் உண்மையிலும் உண்மை. அவர்களிலும், எபி.11ல் உள்ள விசுவாச வீரர்கள் போலவும், பேதுரு யோவான், பவுல், தீமோத்தேயு போன்ற புதிய ஏற்பாட்டு விசுவாசிகள் போலவும், வெளிச்சம் கிடைத்தவர்களும் உண்டு. அல்லேலூயா! இதுபற்றி ஆவியானவர் விளக்குவாராக!

**மேசியா யூதருக்குள் வருவது:-**

(1) அடிமைகளாயிருப்பவர்களுக்கு ஆட்சியைக் கொடுப்பதற்கு (அப்.1:5-7).

(2) பாவத்திற்குள் கிடந்து அழியப்போகும் மக்களுக்கு நித்திய ஜீவனைக் கொடுப்பதற்கு (யோ.3:16). இவைகளிலே அவர்கள் ஆதிமுதல் அதிக முக்கியத்துவம் கொடுத்தது ராஜ்யத்துக்குத்தான். ஆனால், நியாயப்பிரமாணம் முதற்கொண்டு உள்ள வேதப் புஸ்தகங்கள் அதிக முக்கியத்துவம் கொடுப்பது, பாவ நிவாரணம் - நித்திய ஜீவன் பற்றித்தான். இதிலே அவர்கள் எல்லாரும் இன்னும் தேறி விசுவாசிகளாய் ஆகாததால்தான், இன்னும் ராஜ்யம் கிடைக்கவில்லை. இயேசு இரண்டாம் முறை ஒலிவமலையில் கால் வைத்து நம்மோடு வரும்போது, பூமியிலுள்ள யூதர்கள் எல்லாரும் இரட்சிக்கப்படப் போகிறார்கள். (சக.12;10-13:1; ஏசா.66:7,8; 59:20,21; எரே. 23:5,6; ரோ.11:25, 26), அதன் பிறகுதான் அவர்களுக்கு 1000 வருட ஆட்சியைக் கொடுப்பார். (ஆமோ.8:11-12; 2 சாமு.7:16; ஏசா. 9:67; அப். 15:16-18; உபா. 30:3) ("ஆசிரியரின் வெளியரங்கமாகாத தீர்க்கதரிசனங்கள்" என்ற நூலிலுள்ள, "நிறைவேற வேண்டிய உடன்படிக்கைகள்" என்ற செய்தியையும் வாசியுங்கள்). அப்படியானால் பாவநிவாரணம்பற்றி அவர்களுக்கு வேதம் சொல்கின்றதா? அவர்கள் விசுவாசிக்கவில்லையா?

யூதருக்கு ராஜா - மேசியா வருவார் என்று அறிந்தவர்கள், (ஆதி.49:10; என் 24:17-19; முகா.5:2; ஆகாஸ். 2:7; ஏசா.11; மல்.3:1) தானி. 9:26ல், "அந்த அறுபத்திரண்டு வாரங்களக்குப் பின்பு மேசியா சங்கரிக்கப்படுவார்; ஆனாலும் தமக்காக அல்ல" என்றுள்ள வசனத்தை அறிய வேண்டுமே! மேசியா மரிப்பது, தமக்காக அல்ல என்றால் யாருக்காக? என்று அவர்கள் சிந்தித்திருக்க வேண்டுமே! மேலும், ஏசா.53:11,12; 52:13,14 போன்ற வசனங்கள் சொல்வது என்ன? இஸ்ரேலருடைய அக்கிரமத்தை சுமப்பாராமே! அவர்களை நீதிமான்களாக்குவாராமே! அவர்களுடைய பாவத்தை அவரே சுமப்பாராமே! அக்கிரமக்காரரில் ஒருவராய் எண்ணப்படுவாராமே! யார் இவர் என்று யூதர்கள் ஆராயவில்லையா? ஏசா.7:14; மீகா.5:12 போன்ற வசனங்களை ஆராய்ந்திருந்தால், பழைய ஏற்பாட்டிலே "குமாரன்," "மனுஷகுமாரன்" (சங்.2:7; தானி.7:13; 3:25) என்றெல்லாம் வருவதைப் புரிந்திருந்தால், மனிதனாய், வந்து மரிக்கும் நம் இயேசு பற்றி தெரிந்திருப்பார்களே! இஸ்ரேலரின் எத்தனையோ வேத புத்தகங்கள்

கி.பி.70க்குப் பின் காணாமல் போய்விட்டது என்று நாமறிவோம். ஆனாலும், லூக்.24:27, 46; 1 கொரி.15:3,4; எபி.10:5 with சங்.40:7 போன்ற வசனங்களை வாசித்தால், இயேசு வாழ்ந்த காலத்திலேயே காணாமல் போனவைகள் இருந்திருக்கின்றனவே! எரே.31:32-34ல், "யூதரோடு" புது உடன்படிக்கை பண்ணுவேன் என்று சொல்லப் பட்டுள்ளதே, அது எப்போது? எதற்கு? ஏன்? என்று அவர்கள் சிந்தித்திருக்க வேண்டாமா?

மட்டுமல்ல லேவி.23ல் உள்ள பண்டிகைகளில், "பஸ்கா பண்டிகை," அவர்களின் எகிப்தின் விடுதலையைக் குறிக்கிறது என்று அவர்கள் சொன்னாலும், மூன்றாம் நாள் "முதற்பலன்" பண்டிகை, எதற்கு நிஜம் என்று சிந்திக்க வேண்டாமா? மேலும், பாவ நிவாரண நாள் பண்டிகையின் போது, "பலியாடு", "போக்காடு" என்று இரண்டு ஆடுகள் வைத்து, வருஷத்துக்கு ஒரு முறை பாவ நிவாரணம் தேடுகிறார்களே அதன் நிஜம் அவர்களுக்கு புரிந்திருக்க வேண்டாமா? தினந்தோறும் காலையும், மாலையும் பலியிட்டும், ஓய்வு நாள், அமாவாசை போன்ற நாட்களில் இரண்டு மடங்கு பலியிட்டும், அதுவும் போதாதென்று, வருஷத்திற்கு ஒருமுறை, பாவ நிவாரண நாளன்று, ஜனங்களுக்கு பாவநிவர்த்தி செய்யப்பட்டும் (லேவி.16:33,34), அவைகளிலே முழுதிருப்தியில்லாமல், வருடா வருடம் தொடர்ந்து செய்கிறார்களே. அதன் தாற்பரியம் என்ன என்று விளங்கியிருக்க வேண்டாமா? காளை, வெள்ளக் கடாவின் இரத்தத்தாலேயே பாவமன்னிப்பு உண்டாயிற்று என்று அவர்கள் நினைத்திருந்தால், தொடர்ந்து செய்திருக்க வேண்டாமே! **கமாலியேலின் பாதபடியில் படித்த வேதப்பண்டிதன் பவுலுக்கு விளங்கியது அவர்களுக்கு விளங்கவில்லையோ!**

மேலும், ஆதி.9:6ல், "**மனுஷன் தேவ சாயலில் உண்டாக்கப்பட்ட படியால், மனுஷனுடைய இரத்தத்தை எவன் சிந்துகிறானோ, அவனுடைய இரத்தம் மனுஷனாலே சிந்தப்படக்கடவது**" என்று உள்ளதால், பாவநிவாரணம், மனிதன் இரத்தம் சிந்தினால் தான் கிடைக்கும் என்பதுதான் வேத வெளிச்சம். இந்த வசனம் தெரிந்தவர்களுக்கு, மிருகபலி, முழு பாவ நிவாரணமாகாது என்று தெரியுமல்லவா? பாவம் செய்த மனிதன்தான் இரத்தம் சிந்த வேண்டுமென்றால் மல்.2:15ன் படி பக்தியுள்ள சந்ததியே இல்லாமல் போகுமே! தேவனின் படைப்பு வீணாகுமே! படைப்பு வீணாகும் படியாகவா ஆதி.9:6 ஐ தேவன் சொல்லியிருப்பார்? அப்படியானால், பக்தியுள்ள சந்ததி வளரும் படியாய், இரத்தம் சிந்தும் மனிதன் யார்? அந்த ரத்தம் சிந்துவது எல்லாருடைய பாவநிவாரணத்துக்கும்

இணையாகுமா? இந்த சிந்தனை, வேத வாக்கியங்களோடு இணைந்திருந்தால், அவர்கள், பலிமுறைகள், வரப்போகும் மேசியாவுக்கு நிழல் என்று புரிந்திருக்குமே! (See ஆதி.22:17, 18; 13:14-17 with கலா.3:16).

அப்படிப் புரிந்தவர்கள்தான், இயேசுவைப் பார்த்து, "நீ தேவகுமாரனா?" வரப்போகிற மேசியாவா? என்றெல்லாம் இயேசுவிடம் கேள்விகள் கேட்டார்கள். வந்த இயேசுதான், பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்ட மேசியா என்பதற்கு ஏராளமான ஆதார வசனங்கள் உண்டே. தீர்க்கதரிசியும், பிரதான ஆசாரியனுமான காய்பா சொன்னதை யோ.11:49ல் வாசித்தால், இயேசு, மேசியாவாக வந்த நோக்கமும், பலியின் காரியமும் புரிந்திருக்கும் அல்லவா! அறியாமல் செய்த யூதர்கள் அந்தி கிறிஸ்துவின் நாட்களில், யோவேல் 2:28, 29ன் படி பின்மாரி ஊற்றப்படப்போவதால் உண்மைச் சத்தியத்தை உணர்வார்கள். 3 தூதர்களின் தூதும், 2 சாட்சிகளின் சுவிசேஷமும், 1,44,000 பேரின் செயல்பாடுகளும், அந்தி கிறிஸ்துவின் பாவ காரியங்களும், வேதத்தை அறிந்து, 2ம் முறை பூமிக்கு வரப்போகும் மேசியாவாகிய நமது இயேசுவை (அப்.1;11) விசுவாசித்து, இரட்சிக்கப்பட ஏதுவாயிருக்கும். அல்லேலூயா! அந்த நாள் சீக்கிரம் நடக்க ஜெபிப்போம்! அதற்குமுன் சபையாராகிய நாம் இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்பட்ட ஆயத்தமாவோம்! மற்றவர்களையும் ஆயத்தமாக்குவோம்! இயேசு சீக்கிரம் வருகிறார்! அல்லேலூயா! ஆமென்.

❖ ❖ ❖

**இயேசு சீக்கிரம் வருகிறார்!**

**ஆயத்தமாவோம்!!**

**ஆயத்தமாக்குவோம்!!!**

## நமது ஊழியங்கள்

1. "விசுவாச முழக்கம்" பத்திரிக்கை ஊழியம்
2. "விடுதலை கிறிஸ்துவின் சபைகள்"
3. "சேவியர் இறையியல் பயிலகம்" - பைபிள் காலேஜ் ஊழியம்
4. விசுவாசக் கருத்தரங்கு ஊழியம்
5. வசன விளக்கம் எப்போதும் (காலை 10 மணி முதல் இரவு 11 மணி வரை)
6. வெப்சைட், பாடல் மற்றும் செய்தி சி.டி. ஆராய்ச்சி புத்தகங்கள், Facebook, you tube, Whatsapp ஊழியம்
7. கஸ்தூரிபாய் ஆசிரமம்.

இன்னும் பல .......

**இந்த மாத "விசுவாச முழக்கம்" வாசித்தீர்களா?**

## ஆசிரியர் அழைத்தால் வரத் தயார்

ஞாயிறு ஆராதனைக்கு...
வேதப்பாடம் நடத்த...
வசன விளக்கம் கொடுக்க...
சுவிசேஷக் கூட்டம் நடத்த
கருத்தரங்குகள் வைக்க...
முஸ்லீம்கள், இந்துக்கள், நாத்திகர்கள்
ஆகியோரோடு கலந்துரையாட...
பைபிள் காலேஜில் போதிக்க...
உபவாசம், முழு இரவு ஜெபம்
போன்ற எல்லா கூட்டங்களுக்கும்

# ஆசிரியரின் வெளியீடுகள்

## ஆராய்ச்சிப் புத்தகங்கள்

★ கருகலான சத்தியம் (பாகம் I)

★ கருகலான சத்தியம் (பாகம் II)

★ தெரிந்து கொள்ளுங்கள் (பாகம் I)

★ தெரிந்து கொள்ளுங்கள் (பாகம் II)

★ வியாதியா? மரணமா?

★ விசுவாசித்தேன்! ஆகையால் பேசுகிறேன்! (பாகம் I & பாகம் II)

★ வெளியரங்கமாகாத தீர்க்கதரிசனங்கள்

★ கதைகள் அறுபது

★ சிறுவர் ஊழியம்

★ இஸ்லாமியரின் கேள்விகள்

★ உங்களுக்குத் தெரியுமா?

★ கள்ள உபதேசக்காரர்களின் கேள்விகள்

★ இரத்தம் சிந்தித்தான் பாவமன்னிப்பா?

## பாடல் சி.டி

★ ஆடியோ : ரூ. 50/- வீடியோ : ரூ. 50/-

★ (ஆடியோ சி.டி. Vol. I, II, IV, VI மற்றும் DVD சி.டி. Vol. III, V)

## தீர்க்கதரிசன விளக்கவுரைகள் DVD

★ வெளிப்படுத்தின விசேஷம் (3 சி.டி)

★ தானியேல் (3 சி.டி)

(ஒரு செட் ரூ. 200/-)

## கருத்தரங்கு செய்திகள் DVD (ஒவ்வொன்றும் ரூ. 50/-)

★ இனி சம்பவிக்கப் போகிறவைகள்

★ குரான் சொல்லும் ஈசா தேவனா?

★ இயேசு ஏன் வரவில்லை?

★ வேதம் விஞ்ஞானத்திற்கு ஒத்திருக்கிறதா?

★ ஆவியின் அபிஷேகமும் அக்கினி அபிஷேகமும்

★ கள்ள உபதேசமும் கள்ள தீர்க்கதரிசினமும்

★ மாறுபாடுள்ள சந்ததி எது?

- ★ வேதம் பற்றி முஸ்லீம்கள் சொல்வது சரியா?
- ★ குரானில் குளறுபடிகள் உண்டா?
- ★ வேதத்தில் குளறுபடிகளா? பொய்த்தகவல்களா?
- ★ இயேசுபற்றி முஸ்லீம்களின் கருத்தென்ன?

**அரை மணிநேர DVD செய்திகள்** (ஒவ்வொன்றும் ரூ. 50/-)

- ★ இயேசு வருவாரா?
- ★ அந்தி கிறிஸ்து எப்போது வெளிப்படுவான்?
- ★ எது தேவசித்தம்?
- ★ வியாதி தேவனின் சிட்சையா?
- ★ திரித்துவம் உண்டா?
- ★ அந்நிய பாஷை
- ★ எது ஆவிக்குரிய சபை?
- ★ படைப்பின் இரகசியம்
- ★ மரணத்திற்குப் பின் நிலை என்ன?
- ★ தெய்வீக சுகம்
- ★ எது விசுவாச ஊழியம்? எது விசுவாச வாழ்க்கை?
- ★ இயேசுவின் இரத்தம்
- ★ பண்டிகைகள் தேவையா?
- ★ வரமும், கனியும், வல்லமையும், அதிகாரமும்
- ★ ஆசீர்வாதமும், சாபமும், வாக்குத்தத்தமும், தண்டனையும்
- ★ இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானமா?
- ★ இயேசு சர்வவல்லமையுள்ள தேவனா?
- ★ சபைக்குள்ளே நிறைவேறுகிற - நிறைவேறப்போகிற தீர்க்கதரிசனங்கள்
- ★ நியாயப்பிரமாணம் ஏன் கொடுக்கப்பட்டது?
- ★ நிறைவேற வேண்டிய உடன்படிக்கைகள்
- ★ யார் அந்த இரண்டு சாட்சிகள்?
- ★ யார் அந்த 1,44,000 பேர்?
- ★ 70 வார தீர்க்கதரிசனம்
- ★ 2300 இராப்பகல் தீர்க்கதரிசனம்

❖ ❖ ❖

# வேதப் பொன்மொழிகள்

- ★ ஆட்களைப் பாராதே! ஆண்டவனைப்பார்!
- ★ வசனமுள்ள வாழ்வு வளமான வாழ்வு!
- ★ விசுவாசம் வெற்றியைத் தரும்
- ★ Where there is vision there will be provision
- ★ போதக சிட்சையே ஜீவ வழி
- ★ பரிசுத்தமாக்குவது வசனமே
- ★ கிரியை இல்லாத விசுவாசம் செத்தது
- ★ Have positive confession
- ★ பூமியிலே நூறத்தனை ஆசீர்வாதம் உண்டு
- ★ இரகசிய வருகைக்கு ஆயத்தமா?
- ★ வேதத்தை விதை! விளையச் செய்பவர் தேவன்
- ★ பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு
- ★ திக்கற்றவர்களையும், விதவைகளையும் விசாரிப்பதே மாசற்ற பக்தி
- ★ ஆசீர்வாதமும் சாபமும் மனிதனே சுதந்தரிக்க வேண்டும்
- ★ வாக்குத்தத்தம் ஒன்றல்ல; இரண்டல்ல; ஏராளம்
- ★ மூல உபதேசம் இல்லாத சபை கிறிஸ்தவ சபையல்ல
- ★ பரிசுத்த ஆவி பெற்றதற்கு அடையாளம் அந்நிய பாஷை



## *Rev. Dr. A. Xavier*
*(Author)*

## ஆசிரியரைப்பற்றி,,,,,,,

1951ம் ஆண்டு மே மாதம் 16ஆம் நாள், தமிழ்நாடு, திருச்சிமாவட்டம் மணப்பாறை அருகே உள்ள சின்ன உடையாபட்டி என்ற குக்கிராமத்தில் ஏழை குடும்பத்தில் ரோமன் கத்தோலிக்க சபையை சார்ந்த பெற்றோருக்குமகனாய் பிறந்தவர்தான் Rev. Dr. A. சேவியர்.

குழந்தை பருவம் முதல் பக்தியோடு வளர்க்கப்பட்டவர். B.Sc., (கணிதவியல்) படிப்பை திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியில் முடித்து. தொலைபேசி துறையில் பணியில் சேர்ந்து, படிப்படியாய் பதவி உயர்ந்து, டிவிஷனல் இன்ஜீனியராக ஆனார்.

கல்லூரியில் படிக்கும்போதே நாத்திகனாய் மாறி இயேசுவுக்கு எதிராளியாய் மாறினார். இந்நிலையில் நெல்லை மாவட்டம் குலசேகர பட்டினத்தை சார்ந்த C.S.Iசபை பெற்றோரின் மகள் கஸ்தூரிபாய் என்பவரை 16.06.1976 அன்று மணந்தார். பக்தியுள்ள மனைவியின் நடக்கையாலும், ஜெபத்தாலும், ஆசிரியருக்குள்ளே ஒரு மாற்றம் உருவானது.

1981–ல் நடந்த ஒரு மோட்டார் சைக்கிள் விபத்தில் ஏற்பட்ட மூளை முறிவிலிருந்து 1985–ல் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் கிடைத்த விடுதலையால் ஒரு பெருத்த மாற்றம் உண்டாகி, 1986 நவம்பரில் இரட்சிக்கப்பட்டு ஆவிக்குரிய கிறிஸ்தவரானார். பெந்தகோஸ்தே சபையில் நுழைந்தவர்,செவென்த்டே அட்வென்டிஸ்ட் சபையினரால் ஈர்க்கப்பட்டு சபை மாறியதால் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்து, அந்த சபையிலிருந்து வெளியேறி, ஆவிக்குரிய விசுவாசியாய் மாறினார். விசுவாச விதையை தமிழகத்தில் விதைத்த தேசத்தின் தீர்க்கதரிசி ஜஸ்டின் பிரபாகரனின் போதனையால் விசுவாசத்தில் பெலப்பட்டு, ஊழியத்தில் நுழைந்தார். அநேக குக்கிராமத்தில் சுவிசேஷ ஊழியம் செய்தார். டிராக்ஸ் ஊழியம், தெருப்பிசங்கம், "எப்போதும் வசன விளக்கம்" போன்றவையெல்லாம் இவருக்கு தேவன் தந்த வரம். மிகவும் சிறிய சபைகளுக்கும் சென்று சத்தியத்தை பரப்பினார். "கடைசிகால விடுதலை முழக்கம்" என்ற மாத இதழை ஆரம்பித்து அதன்பின் "வசன முழக்கம்" என்ற பத்திரிக்கையை நடத்தினார். "விசுவாசம் வெற்றியைதரும்" என்ற தாரக மந்திரத்தை போதித்தார். வாரந்தோறும், மாதந்தோறும், வருடந்தோறும், சென்னையிலும், மாவட்ட தலைநகரங்களிலும் கருத்தரங்குகள் நடத்தி கிறிஸ்தவ சபைகளில் பெரிய எழுப்புதலை உருவாக்கினார். எந்த ஊழியத்திற்கும் யார் அழைத்தாலும் எதையும் பார்க்காமல் உடனே ஒத்துக்கொள்ளும் சுபாவம் உள்ளவர்.

தேவனின் தரிசனப்படி கஸ்தூரிபாய் ஆசிரமம், சேவியர் இறையியல் பயிலகம், விடுதலை கிறிஸ்துவின் சபை, விசுவாச கருத்தரங்குகள், ஊழியர் கருத்தரங்குகள், மற்றும் இணையதளம், தொலைக்காட்சி, முகப்புத்தகம் போன்ற பல ஊடகங்கள் மூலம் இணைந்து ஊழியம் செய்து வருகிறார். தற்போது "விசுவாச முழக்கம்" என்ற மாதஇதழ் கௌரவ ஆசிரியராகி ஒரு வசனப்புரட்சி செய்து வருகிறார். அன்னாரின் ஊழியம் விரிந்து பரவ அநேக ஆத்துமாக்களை வருகைக்காய் ஆயத்தமாக்க ஜெபியுங்கள்.


endtime deliverance ministry

endtimetrust xavier

9444979822

revdrxavier@gmail.com